வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 05.04.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 121 | பக்கங்கள் : 16

## ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி யாழ். பல்கலை மாணவர்களும் பேரணி




யாழ்ப்பாணம், ஏப். 05

நாட்டில் எழுந்துள்ள பெரும் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப் பேற்று ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் எனக் கோரி யாழ். பல்கலைக் கழக மாணவர்களால் நேற்று பெரும் ஆர்ப் பாட்டப் பேரணி நடத் தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழ கம் முன்பாக மாணவர் கள் நேற்றுக் காலை அர சுக்கு எதிராகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

11

## அரசாங்கத்திலிருந்து வெளியேறியது சு.க.!

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து வெளி யேறுவது என ஸ்ரீலங்கா சுதந் திர கட்சி தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து பாராளு மன்றில் சுயாதீனமாக இயங்க சுதந்திரக்கட்சி தீர்மானித்துள் ளதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர தெரித்தார்.

இதேவேளை,

11

## தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்கு நேற்று பிணை

கிளிநொச்சி, ஏப். 05

கிளிநொச்சி மாவட்டம் இயக்கச்சிப் பகுதி யில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த நபரின் தொலைபேசியில் திருமண அழைப்பு அட்டை மற்றும் தொலைபேசி இலக் கங்கள் காணப்பட்டதால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டிருந்த இருவர் இரு ஆண்டுகளின் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

வட்டக்கச்சியைச் சேர்ந்த 41 வயதுடைய இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியசாலை ஊழியரான வைத்திலிங்கம் நிர்மலதாஸ் ஆகிய இருவருமே பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

11

# 113 எம்.பிக்களுடன் வந்தால் அரசைக் கைளிக்க தயார்!

## ஜனாதிபதி கோட்டாபய அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 05

"பாராளுமன்றத்தில் உள்ள ஏதேனும் கட்சி யொன்று சாதாரண பெரும்பான்மையை (113) நிரூ பித்தால் அவர்களிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு தயார்" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பி னரும், முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க வெளியிட்டார்.

11

## மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் பதவி துறப்பு



கொழும்பு, ஏப். 05

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பதவியை இராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று திங்கட்கிழமை தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் இராஜி னாமா செய்துள்ள சூழலில், இன்று தான் ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

11

## நாமலின் பதாகையை கிழித்து போராட்டம்!

கொழும்பு, ஏப். 05

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் பதாகையை கிழித்து சிங் கள மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி யுள்ளனர்.

அரசுக்கு எதிரான போராட்டங்கள் நாடு முழுவதும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தென் பகுதியில் முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

போராட்டத் தில் ஈடுபட்ட

11

## கோட்டாபயவின் அழைப்பை நிராகரித்தன எதிர்க்கட்சிகள்!

கொழும்பு, ஏப். 05

அமைச்சு பதவிகளை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை பிர தான எதிர்க்கட்சிகள் நிராகரித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள் ளிட்ட கட்சிகளே ஜனாதி பதியின் அழைப்பை இவ்வாறு நிராகரித்துள் ளன.

அத்துடன், அமைச்சு பதவிகளை துறந்து நாட கம் ஆடாமல், இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும் எனவும் மேற்படி

11




## கோட்டாபய அரசுக்கு எதிராக நாடு முழுக்க வலுக்கும் எதிர்ப்பு

### அமைச்சர்களின் வீடுகளும் முற்றுகை

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கத்திற்கு எதிராக நாட்டின் பல்வேறு பகுதி களில் போராட்டங்கள் தீவிரம டைந்துள்ளன.

தற்போதைய பொருளாதார நெருக்கடி

11

## ரெலோவை வெளியேறுமாறு சுமந்திரன் கூறியமை தவறு!

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 05

தமிழ் தேசிய கூட்டமைப்பிலி ருந்து ஒரு கட்சியை வெளியேறு மாறு மற்றொரு கட்சியை சேர்ந்த வர்கள் கூறுவது பிழை யான நடை முறை. இதற்கு நிரந்தர தீர்வு காணும் நடைமுறையை விரைவில் உருவாக்குவோம் என தெரிவித்தார் தமிழ்த்

11

## அமைச்சர் கெஹலியவின் இல்லம் நேற்று முற்றுகை!

### ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைத் தாக்குதல்

கொழும்பு, ஏப். 05

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வல வீட் டுக்கு முன்பாக நேற்று மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி நாடு முழுவதும் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பி னர்களின் வீடுகளுக்கு முன்பாகவும் மக்களால் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்

11

## மஹிந்தவின் கார்ல்டன் இல்லமும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகை

### கண்ணீர்ப் புகை வீசி தடுத்தது பொலிஸ்

கொழும்பு, ஏப். 05

தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்திற்கு முன்பாக முன்னெடுக்கப் பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் நீர்த் தாரை மற்றும் கண் ணீர்ப்புகை தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று பிற் பகல் வேளை அதிகள வான

11

## இன்று முதல் 8 ஆம் திகதி வரை ஆறரை மணி நேரம் மின் தடை!

கொழும்பு, ஏப். 05

இன்று செவ்வாய்க் கிழமை முதல் 8 ஆம் திகதி வரை 6 மணித்தியாலங் கள் 30 நிமிடங்களுக்கு மின் வெட்டை மேற் கொள்ள இலங்கை மின் சார சபை விடுத்த கோரிக் கைக்கு பொதுப் பயன் பாடுகள் ஆணைக் குழு அங்கீகாரம் வழங்கியுள் ளது.

இதன் அடிப்படையில், இன்று ஏ,பி,சி,டி, ஈ,எவ்,ஜி, எச்,ஐ, ஜே,கே, எல் ஆகிய வலயங் களுக்கு காலை 8 மணி முதல்

11

ஈழநாடு



## இப்படியும் நடக்கிறது...!

அரசுக்கு எதிரான போராட்டங்கள் கடந்த இரண்டு நாட்களாக தீவிரமடைந்துள்ள நிலையில் அதனைத் தணிப்பதற்கு என்ன செய்யலாம் என்பதில் அரசியல் வட்டாரங்களிலும் 'போராட்டம்'தான் நடந்து கொண்டிருக்கின்றது.

பிரதமர், பதவிவிலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து விட்டார் என்றும், அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா என்பது தெரியவில்லை என்றும் கொழும்பில் பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்றின் பிரதி ஆசிரியர் ஒருவர் தனது ருவிட்டர் பக்கத்தில் தகவல் பதிவுசெய்தபோது, அது உண்மையாக இருக்கலாம் என்றும், சரியான தகவல் இல்லாமல் ஒருவர் தனது பிரத்தியேக ருவிட்டர் தளத்தில் அப்படி பதிவுசெய்திருக்க மாட்டார் என்றும் 'ஈழநாடு' ஆசிரிய பீடத்தில் விவாதமே நடந்தது.

இதேவேளை, பிரதமர் ஜனாதிபதியை சந்திப்பதற்காக சென்றிருக்கிறார் என்றும், இருவரும் முக்கிய ஆலோசனையில் இருக்கின்றனர் என்றும் செய்திகள் வெளிவந்துகொண்டிருந்தன. அப்படியெனில், அவர் அலரிமாளிகையில் இருந்து ஜனாதிபதி இருக்கும் இடத்திற்கு சென்றுவிட்டார் என்பதுதானே செய்தி.

பிரதமரின் ஊடகச் செயலாளர் ரொஹான் வலிவிட்டவுடன் இந்த ஊர்க்குருவி தொலைபேசியில் தொடர்பு கொண்டு செய்தியை ஊர்ஜிதம் செய்ய முயன்றபோது, பிரதமர் அப்போது அலரிமாளிகையில் இருந்தார். இப்படி செய்திகள் வருகின்றனவே என்று அவரிடம் கேட்டபோது, அவை எல்லாம் இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் என்றார் அவர்.

அவர் சொன்னதும் உண்மைதான். ஆனாலும், பிரதமர் இராஜினாமா என்ற செய்தியும் நெருப்பில்லாமல் புகையில்லை என்பதை அறியமுடிந்தது.

இந்த நெருக்கடியைத் தவிர்க்க, அனைவரினதும் கோரிக்கை ஒன்றுதான். நிதி அமைச்சர் பதவி விலகவேண்டும் என்பதுதான் அது. ஆனால் அவரோ, தான் தனியாக பதவி விலக விரும்பவில்லை. அதேவேளை, அவரை பதவியிலிருந்து தூக்கிவிடவும் ஜனாதிபதி விரும்பவில்லை. இந்த நிலை மையை எப்படி எதிர்கொள்வது என்று யோசித்த பிரதமர், தான் பதவி விலகினால் ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகியதாகிவிடும். அப்படி அமைச்சரவை பதவி விலகிய பின்னனர், அது புதிய அமைச்சரவையோ, அல்லது இப்போது பரவலாக எதிர்பார்க்கப்படும் இடைக்கால அரசோ எதுவாக இருந்தாலும், அதில் நிதி அமைச்சு பொறுப்பை வேறு ஒருவருக்கு கொடுத்துவிடலாம். மகி

ஹிந்தவின் இந்த நகர்வை புரிந்துகொண்ட ஏனைய அமைச்சர்கள், பிரதமர் பதவி விலகவேண்டியதில்லை என்றும், தாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக பதவி விலகுவோம் என்றும் முடிவெடுத்தனர். இதற்கிடையே அனைவரும் இராஜினாமா செய்வது என்று முடிவெடுத்த பின்னரும்கூட, அவர்கள் தமது இராஜினாமா கடிதத்தை பிரதமரிடம் கையளித்தது மற்றுமொரு வேடிக்கை.

அமைச்சர் ஒருவர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் எனில் அதற்கான கடிதத்தை ஜனாதிபதியிடமே கொடுக்கவேண்டும். ஆனால் இவர்களோ, அரசமைப்புக்கு முரணாக பிரதமரிடம் கையளித்தனர். அது, பிரதமர் விரும்பினால் ஜனாதிபதியிடம் கொடுக்கட்டும் என்ற எதிர்பார்ப்பாக இருந்திருக்கவேண்டும்.

ஆனால், நாமல் ராஜபக்ஷவும் நீதி அமைச்சர் அலி சப்ரியும் மாத்திரமே தமது பதவிவிலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தனர் என்பதையும் கவனிக்கவேண்டும்.

இப்போது, அடுத்து என்ன என்பதுதான் நாட்டு மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் எழுந்துள்ள கேள்வி. இடைக்கால அரசை அமைக்க அனைவரையும் அதில் சேருமாறு ஜனாதிபதி இப்போது அழைப்பு விடுத்திருக்கிறார்.

இன்று நாட்டில் ஆங்காங்கே நடைபெறும் போராட்டங்களின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சக்தியும், ஜேவிபியும் தான் இருந்துகொண்டிருக்கின்றன என்பது இரகசியமானதல்ல. ஆனால், அவர்கள் இருவருமே இடைக்கால அரசில் தாங்கள் இடம்பெறப்போவதில்லை என்பதை திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர். அவர்களின் கோரிக்கையும் 'கோட்டா கோ ஹோம்' என்பதாகவே இருக்கும் நிலையில், இடைக்கால அரசு அமைந்தாலும் அந்த அரசு நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியை உடனே தீர்த்து வைக்க ஒன்றும் மந்திரஜால வித்தை மூலம் தீர்க்கக்கூடிய பிரச்னை அல்ல இது.

எந்த அரசு அமைந்தாலும், பிச்னைகள் இன்னும் சில காலத்திற்கு தொடரவே செய்யும். அதுவரை, இன்று வீதியில் நிற்பவர்கள் நிற்கத்தான் போகிறார்கள் என்றால், நாடு இன்னும் சீரழிவையே சந்திக்கவேண்டியிருக்கும்.

நாட்டின் பிரதானமான நெருக்கடி, இறக்குமதி தேவைக்கான டொலர்களை திரட்டுவதுதான். அதற்கு நமது சுற்றுலாத்துறை ஒன்றே பிரதான மூலதனம். நாடு தொடர்ந்து கொந்தளிப்பாக இருந்தால், மீண்டும் சற்றே நிமிரத் தொடங்கியிருக்கும் சுற்றுலாத்துறையும் மீண்டும் படுத்துவிடும். புதிய அரசு - அது இடைக்கால அரசாக இருந்தாலும், மீண்டும் கடன்பெறுவதன் மூலமே உடனடிப் பிரச்னைக்கு தீர்வுகாண முயன்றால், மீண்டும் நம் தலைமீதான கடன் சுமை நம் கழுத்தை நெரித்துவிடும்!

- ஊர்க்குருவி

# ஜனாதிபதியை அவசரமாக சந்தித்த ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஏப். 05

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ. கா. தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர்.



நேற்று முன்தினம் அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் பதவிகளை இராஜினாமா செய்துள்ள நிலையில், இ.தொ. காவின் இந்த திடீர் சந்திப்பானது கொழும்பு அரசியலில் தற்போது பேசும் பொருளாக மாறியுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கமே காரணமென பல்வேறு பகுதிகளிலும் மக்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில், இ.தொ.கா ஜனாதிபதியை சந்தித்தமைக்கான காரணங்கள் இதுவரை வெளியாகவில்லை.

அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி சர்வ கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் இ.தொ.காவும் புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்திடம் நிலையான கொள்கை இல்லாத காரணத்தினால் மலையக மக்களின் வாழ்வாதாரம் தற்போது கேள்விக்குறியாகியுள்ள நிலையில், இவ்வாறு இ.தொ.கா ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியமைக்கான காரணம் குறித்து பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். (அ)

# கோட்டாபய விடுத்த அழைப்பை நிராகரித்த ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 05

தற்போதைய தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக அனைத்துக் கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகோர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், "பொதுமக்களின் வேண்டுகோள் கோட்டா வீட்டிற்குச் செல்லவேண்டும் என்பதே, நாங்கள் அந்த போக்கை ஆதரிப் போம் மற்றும் ராஜபக்ஷர்களின் கீழ் எந்த பதவியையும் ஏற்க தயாராக இல்லை" என குறிப்பிட்டார். (அ)

# பொகவந்தலாவையிலும் வெடித்தது போராட்டம்!





கொழும்பு, ஏப். 05

நாட்டின் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் டீசல், மண்ணெண்ணெய் தட்டுபாடு போன்ற வற்றுக்கு எதிராகவும் நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் பொகவந்தலாவை டின்சின் நகரில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை வெளியேறுமாறு கோஷங்கள் எழுப்பி பதாதைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த ஆர்ப்பாட்டத்தில் டின்சின் மற்றும் அப்பகுதியில் உள்ள சில தோட்டங்களைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். (அ)



# ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சிசு!

கொழும்பு, ஏப். 05

சிசுவொன்ற பிரசவித்த தாயும், அவரது கணவனும் பிறந்த நாளன்றே சிசுவையும் தூக்கிக்கொண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த புகைப்படம் வைர லாகியுள்ளது.

இந்தப் படம் எவ்விடத்தில் வைத்து பிடிக்கப்பட்டது என்பது தொடர்பிலான விவரங்கள் வெளிவரவில்லை. என்றாலும், குடும்பத்தை கொண்டு நடத்துவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையை சமாளிக்க முடியாமலே, இந்த குடும்பத்தினர், பச்சைக் குழந்தையுடன் வீதிக்கு இறங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu
05.04.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அரசியல் நெருக்கடி நிலை?

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். ரணிலின் கருத்து இலகுவாக நிராகரிக்கக்கூடிய ஒன்றல்ல. இந்தியாவின் நிதியுதவியால், ஒரு சில வாரங்களுக்கு தாக்குப்பிடிக்க முடிந்தாலும்கூட, அதிக காலத்துக்கு நிலைமைகளை சமாளிக்க முடியாது. மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து, கொழும்பின் அரசியல் குழப்பமடைந்திருக்கின்றது. மக்களது எதிர்ப்பின் எதிரொலியாக, அமைச்சரவை மாற்றப்பட டுள்ளது. ஆனால் அமைச்சரவை மாற்றத்தால் பிரச்னைகளை தீர்க்க முடியுமா?

அரசியல் நெருக்கடியின் இலக்கு மிகவும் தெளிவானது. ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றுமாறான கோரிக்கை வலுவடைந்து வருகின்றது. ஆனால் அவர் பதவி விலகுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. இந்த நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்புக்களை முன்னெடுக்க முயற்சிப்பவர்களுக்கு தொடர்ந்தும் செயல்படுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன.

அதேவேளை, அரசாங்கத்திற்கு எதிராக வீதிக்கு வரமுடியுமென்னும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. ஊரடங்குக்கு மக்கள் கட்டுப்படாமையால், தடைகள் மூலம், மக்களின் எதிர்ப்பை கட்டுப்படுத்த முடியாதென்னும் நிலைமையும் உருவாகியிருக்கின்றது. அடக்குமுறைகளைக் கட்டவிழ்ப்பதன் மூலமும், மக்களின் எதிர்ப்பை கட்டுப்படுத்தமுடியாதென்பதையும் அரசாங்கம் புரிந்து வைத்திருக்கின்றது.

ராஜபக்ஷக்கள் அரசியல் ரீதியில் தோல்வியடைந்திருக்கின்றனர். மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து, அமைச்சரவையை மாற்றியமைத்து, விடயங்களைச் சமாளிக்கலாம் என்னும் நிலைக்கு இறங்கிவந்திருப்பதே, ராஜபக்ஷக்களின் தோல்விக்கான சான்றுதான். நாடு பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்ததன் பின்னர்தான், சிங்களவர்களின் நிலைமை, அவர்களுக்கு தெரிந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியைக் கொண்டு தொடர்ந்தும் சிங்கள மக்களை வசியப்படுத்தலாம் என்னும் அரசியல் கணக்கினடிப்படையில்தான், அரசாங்கம் இதுவரை செற்பட்டுவந்தது. சிங்கள வெற்றிவாதமும், பௌத்த தேசியவாதமும் போதுமானதென்னும் அடிப்படையில்தான், அரசாங்கம் செயற்பட்டுவந்தது. ஆனால் அவர்களின் கணக்கு மோசமான தோல்வியை தழுவியிருக்கின்றது. ஒரு கூற்றுண்டு. பசி வந்தால் பத்தும் பறந்து போகும். அதே போல் - நாட்டின் நெருக்கடி நிலைமையை சமாளிக்க முடியாமல் போகும்போது, எந்தவொரு வெற்றிவாதமும், சிங்கள வீராப்பும் பயன்படாது என்பது தற்போது தெட்டத் தெளிவாகியிருக்கின்றது.

ஆனால் இந்த நிலைமை இத்தோடு முடிந்துவிடப் போவதில்லை. நிலைமைகளை மிகவும் கவனமாக கையாளாதுவிட்டால், அரசியல் நெருக்கடி, பாரிய அரசியல் கிளர்ச்சியாகவும் விரிவடையலாம். இதனால் தென்னிலங்கையின் அரசியல் ஒட்டுமொத்தமாக, நிலைகுலையலாம். இந்த நிலைமைகளை தமிழர்கள் கவனமாகவும், நிதானமாகவும் அணுக வேண்டும். ஏனெனில் தென்னிலங்கையில் ஏற்படும் அரசியல் கொந்தளிப்பு தமிழ் மக்களுக்கு வாய்ப்புக்களை கொண்டுவருமென்னும், அளவுக்கதிகமான கற்பனைகள் பயன்படாது. நிலைமைகளை, தமிழ் மக்களின் நலனிலிருந்து எவ்வாறு கையாளுவதென்னும் தூரநோக்கிலான திட்டங்கள் தொடர்பிலேயே தமிழ்த் தேசிய தரப்புக்கள் சிந்திக்க வேண்டும். ஆனால் அவ்வாறான தலைமைகளை காண முடியாமல் இருப்பதுதான் தமிழ் மக்களின் அரசியல் துரதிர்ஷ்டம்.

# ஊரடங்கு வாழ்வு!

**அலசுவது இராஜதந்திரி**

*ஈழநாடு பத்திரிகையை ஆசிரியத் தலையங்கங்கள் மூலமாக எண்பதுகளில் உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றவரே ஈழநாடு பத்திரிகையின் அன்றைய பிரதம ஆசிரியராக இருந்த அமரர் என்.சபாரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது.*

*யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் இளைப்பாறிய பிரபலமிக்க அதிபரான என்.சபாரத்தினம், தமது அதிபர் பதவி ஓய்வின் பின்னர் ஈழநாடு ஸ்தாபகர் அமரர் கே.ஸி. தங்கராசாவின் விருப்பத்தின் பேரில் ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார். அபாரமான ஆங்கில அறிவும் பரந்து விரிந்த உள்நாட்டு மற்றும் வெளி உலக பார்வையோடு ஈழநாடு பத்திரிகைக்குரிய சிறந்த தமிழறிவும் கொண்டவராக அமரர் என். சபாரத்தினம் விளங்கினார்.*

*எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் மற்றும் ஈழநாடு பத்திரிகை ஆகியவை தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவங்கள், ஏறத்தாழ மூன்று தசாப்தகாலங்களுக்கு நீடித்துச் சென்ற வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு கட்டியம் கூறியருந்தன.*

*இத்தகைய பின்னணியல் ஈழநாடு 1981ஆம் ஆண்டு ஜூன் மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டதோடு அந்த நூலகத்தை எரித்த அதே இரவில் கயவர்கள் ஈழநாடு பத்திரிகையையும் எரித்து விட்டிருந்தனர்.*

*இருந்தபோதிலும் ஈழநாடு தளர்ந்து விடாது உடனடியாகவே பத்திரிகையாளர்களின் துணிச்சலான பங்களிப்போடு மீளவும் விரைந்து வெளிவந்திருந்தது.*

*ஈழநாடு பத்திரிகை மீளவும் வெளிவந்த போது அதன் வளர்ச்சிக்கு அடிநாதமாகவும் பக்கபலமாகவும் நின்றவையே அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த அமரர் என். சபாரத்தினத்தின் ஆசிரியர் தலையங்கங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*எண்பதுகளில் ஒருபுறம் வடக்கு-கிழக்கின் ஆயுதப்போராளிகளின் வளர்ச்சி மறுபுறத்தே அரச படையினரின் யுத்த சன்னதம் என்பவை உத்வேகம் பெறவே வடக்கின் பெரும்பகுதி அடிக்கடி ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் காரணமாக வடக்கு மக்களினதும் நாளடைவில் கிழக்கு மக்களினதும் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அவர்களது சமூக, பொருளாதார , கல்வி சார்ந்த விடயங்கள் முடக்கமடைய ஆரம்பித்தன.*

*எனவே யாழ்ப்பாணத்தில் விரைந்து மாற்றங்கண்டு வந்த வாழ்க்கை முறை தீவிரமடைய ஆரம்பித்த ஆயுதப்போராட்டம் என்பவற்றை மையமாக வைத்து காலஞ்சென்ற ஈழநாடு பிரதம ஆசிரியர் என். சபாரத்தினம் எழுதிய ஆசிரிய தலையங்கங்களில் ஒன்றே ‘ஊரடங்கு வாழ்வு’ என்று தலைப்பிடப்பட்ட ஆசிரிய தலையங்கமாகும்.*

*இளஞ்சமூகத்தினரையும் ஆசிரியர் என். சபாரத்தினத்தின் ஆசிரியர் தலையங்கங்கள் பெரிதும் கவர்ந்திருந்த நிலையில் அன்றைய யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் குழாம் ஒன்று ஈழநாடு ஆசிரிய தலையங்கங்களை நூல் வடிவிலும் கொண்டுவந்திருந்தது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட நூலுக்கு கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு கூட ‘ஊரடங்கு வாழ்வு’ என்பதாகும்.*

*இந்நிலையில் தற்போது இலங்கையில் நிலவுகின்ற பாரிய பொருளாதார பிரச்னை காரணமாக மக்கள் கிளர்ந்தெழுவதை தடுக்கும் விதத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தியிருந்தது.*

*இதன் காரணமாக நாட்டின் பல பாகங்களும் முடங்கிப்போயிருந்தன. இதுதவிர வடக்கு-கிழக்கில் எண்பதுகளில் வெளிப்பட ஆரம்பித்த அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருளுக்கான தட்டுப்பாடு மற்றும் மின்சார விநியோகங்களில் அடிக்கடி ஏற்பட்ட பாதிப்புகள் என்பவற்றை போலவே தற்போது கொழும்பிலும் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் எரிபொருளைப் பெறுவதற்கான வரிசை, அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கான வரிசை, மின் விநியோகத்தில் ஏற்படும் தடைகள் என்பவை காணப்படுகின்றன.*


*இதுதவிர நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் இன்றைய ஆட்சியாளர்களுக்கெதிராக கிளர்ந்தெழ ஆரம்பித்துள்ளனர்.*

*இதன் காரணமாக நிலைமை மோசமடையும் பட்சத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வந்ததுபோல மீளவும் ஊரடங்கு சட்டங்களை அரச தரப்பினர் அடிக்கடி அமுல்படுத்த முடியும் என்றே எதிர்பார்க்க முடிகின்றது. இதனால் தென்னிலங்கை மக்களின் வாழ்க்கை மேலும் பாதிக்கப்பட முடியும்.*

*வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஊரடங்கு வாழ்க்கைக்கு பெரிதும் பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். அசாதாரண நிலவரங்கள் தலைகாட்டியபோது நிலைமைகளை அவர்கள் நல்ல முறையில் கையாண்டிருந்தனர்.*

*ஆனால் தென்னிலங்கையில் அனைத்துமே முடங்கிவரும் சூழலில் பொருளாதார இடர்பாடுகளினால் மக்களது கிளர்ச்சியை அடக்க-அடிக்கடி தோற்றம் பெறக்கூடும் என்று உத்தேசிக்கப்படக்கூடிய ஊரடங்கு வாழ்க்கையை எவ்வாறு தென்னிலங்கையர்கள் சமாளிக்கப்போகின்றார்கள் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றி அமைப்பீர்கள்.மகிழ்ச்சியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.கண் தொடர்பான பிரச்னை வந்தாலும் அதிலிருந்து விரைவில் மீளுவீர்கள்.

**இடபம்**
எப்போதோ எதிர்பார்த்த லாபம் இன்று நிதானமாக கிடைக்கும்.வரவு செலவுகளை திட்டமிட்டுச் செய்வது நல்லது.வேலைப்பளு காரணமாக ஓய்வின்றி உழைப்பீர்கள்.

**மிதுனம்**
ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உற்சாகம் கூடும்.நண்பர், உறவினர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவ காத்திருப்பர்.எதிர்பாராத சுபச்செலவால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கடகம்**
கோபத்தின் காரணமாக நல்ல நட்பை இழக்க வேண்டாம்.புதிய பொறுப்பு ஒன்றைத் திறம்படக் கையாண்டு வெல்வீர்கள். வெளியிடங்களில் நீங்கள் எதிர்பார்த்த நல்லசெய்தி வந்து சேரும்.

**சிம்மம்**
குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.புதிய மனிதர்களிடம் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். உங்களுடைய நேர்மையான உழைப்பு நல்ல பலன் தரும்.

**கன்னி**
மாற்றுக்கருத்து உடையோரைப் புறக்கணியுங்கள்.மறதியால் தவறு செய்ய நேரலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.உடலுக்கு ஒவ்வாத உணவை சாப்பிட வேண்டாம்.

**துலாம்**
பணியிடத்தில் அதிக வேலை இருந்தாலும் சுலபமாக சமாளிப்பீர்கள்.உங்களது முயற்சிக்கான பலன் கிடைப்பதால் உற்சாகம் கூடும்.பணியாளர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம். முன்னேற்றம் உண்டு.

**விருட்சிகம்**
முயற்சிக்கான வெற்றி கிட்டும். துன்பங்கள் விலகி ஓடும்.இன்று குடும்பத்தில் மகிழ்ச்சிக்கான செயல் நடைபெறும்.நேற்றைய இடையூறு இன்று நீங்குவதால் நிம்மதி கூடும்.

**தனுசு**
எடுத்த புதுமுயற்சி ஒன்றில் அனுகூலம் உண்டு. கடமையைப் பொறுப்புடன் செய்வீர்கள். சந்தோஷம் கூடும்.தள்ளிப்போன திருமண வாய்ப்பு கைகூடுவதால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்**
பழைய கவலை தீரும். உறவினரின் உதவி கிடைக்கும்.உங்கள் செல்வாக்கு மேலோங்கும். வசீகரம் அதிகரிக்கும்.வேலைப்பளு அதிகரித்தாலும் அதற்கான பலன் உடனே கிடைக்கும்.

**கும்பம்**
காலையில் குதூகலமும், மாலையில் பொறுப்பும் ஏற்படும்.பணியிடத்தில் உங்களுக்கு முக்கியத்துவம் வருவதால் பெருமிதம் அடைவீர்கள்.நிதிநிலை கூடுவதால் நன்மையும் மகிழ்ச்சியும் உண்டு.

**மீனம்**
கனிவாகப் பேசி நல்லவர்களின் மனதை கவர்வீர்கள்.திடமான பேச்சினால் பெரியவர்களிடம் ஆசி பெறுவீர்கள். மனதில் உறுதியும் தன்னம்பிக்கை கூடுவதால் சந்தோஷம் அதிகரிக்கும்.

# இந்தியாவில் கொரோனா மிகக்குறைவு கட்டுப்பாடுகளை நீக்கியது தமிழக அரசு

சென்னை, ஏப். 05

தமிழகத்தில் கொரோனா தொற்றின் தாக்கம் குறைவடைந்துள்ள நிலையில், கொரோனா கட்டுப்பாடுகள் அனைத்தும் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொது சுகாதாரத்துறை இயக்குநர் மருத்துவர் செல்வவிநாயகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில், முகக்கவசங்களை அணிதல், கைகளை கழுவுதல் உள்ளிட்டவை தொடர்ந்து நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கொரோனா தடுப்பூசி போடுவது குறித்தும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போட்டுக் கொள்ள தகுதியானவர்கள் தாமாக முன்வந்து தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

தமிழக ஆளுநர் விவகாரம்

# மக்களவையில் தி.மு.க. எம்.பிக்கள் வெளிநடப்பு

சென்னை, ஏப். 05

மக்களவையில் ஒன்றிய அரசே, ஒன்றிய அரசே, தமிழக ஆளுநரை திரும்பப் பெறு என தமிழக ஆளுநருக்கு எதிராக தி.மு.க. எம்.பி.க்கள் கோஷமிட்டனர்.

மக்களவை பொதுச்செயலாளருக்கு தி.மு.க. மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நோட்டீஸ் ஒன்றை அளித்தார். அதில், தமிழக ஆளுநர் சட்டப்பிரிவு 200 இன் படி தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற தவறியுள்ளார். இதனால் அரசியலமைப்பு சாசன சட்டச் சிக்கல் எழுந்துள்ளது.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தரவில்லை. மேலும் 3 மசோதாக்களை அவர் ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பாமல் தாமதம் செய்கிறார். இதுகுறித்து உள்துறை அமைச்சர் விளக்கம் தரவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, மக்களவை நேற்று கூடியதும், தமிழக ஆளுநரை வாபஸ் பெறக் கோரி தி.மு.க. எம்.பி.க்கள் கோஷம் எழுப்பினர்.

ஒன்றிய அரசே, ஒன்றிய அரசே, தமிழக ஆளுநரை திரும்பப் பெறு என தமிழக ஆளுநருக்கு எதிராக தி.மு.க. அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தி.மு.க. எம்பிக்கள் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். (அ)

# அமெரிக்கா, தென்கொரியாவுக்கு மு.க.ஸ்டாலின் விரைவில் பயணம்

## அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

சென்னை, ஏப். 05

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் 4 நாள் அரசு முறை பயணமாக டுபாய், அபுதாபி, ஐக்கிய அரபு இராச்சியம் நாடுகளுக்கு சென்று திரும்பினார். அவரது சுற்றுப்பயணத்தின் மூலம் பல நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல இருக்கிறார்.

இது தொடர்பாக அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:-

அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு விடுத்துள்ளன. அவரது அடுத்த கட்ட சுற்றுப் பயணம் தொடர்பாக விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும்-என்றார். (அ)

# மத்திய பல்கலைகளில் நடத்தப்படவுள்ள பொது நுழைவுத் தேர்வை தடுக்கவேண்டும்

## ஓ.பி.எஸ் வலியுறுத்தல்

சென்னை, ஏப். 05

நீட் தேர்வில் தும்பை விட்டு வாலைப் பிடித்ததன் காரணமாக ஏழை, எளிய கிராமப்புற மாணவ, மாணவியர் தற்போது அவதிப்பட்டு வருகின்றனர் என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இந்தியா முழுவதும் உள்ள 45 மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளில் இருக்கின்ற பல்வேறு இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளுக்கான 1.8 லட்சம் இருக்கைகளை நிரப்ப ஏதுவாக 2022-2023 ஆம் கல்வியாண்டிலிருந்து மத்திய பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு நடத்தப்படும். 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இந்தத் தேர்வினை எழுதத் தகுதியுடையவர்கள். பன்னிரெண்டாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்ணிற்கு எந்தவிதமான முக்கியத்துவமும் தரப்படாது என மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது.

தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் நடத்தப்படும் இத்தேர்வுக்கு தி.மு.க. அரசு எதிர்ப்புத் தெரிவித்து இருந்தாலும், நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு தொடங்கிவிட்டதாகவும், நுழைவுத் தேர்வுக்கு இம்மாதம் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம். இத்தேர்வு தமிழ் மொழி உள்பட 13 மொழிகளில் கணினி வழியில் நடத்தப்படும் என செய்திகள் வந்துள்ளன.

இதிலிருந்து மத்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்வு மூலம்தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால், வருங்காலங்களில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் இணைப்புக் கல்லூரிகளில் உள்ள இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கும் நுழைவுத் தேர்வு கட்டாயம் என்ற நிலை உருவாகக் கூடும் என்பதோடு மட்டுமல்லாமல், 12-ம் வகுப்பில் பெறும் மதிப்பெண்ணிற்கு ஒரு மதிப்பு இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

12ஆம் வகுப்பு என்பது நுழைவுத் தேர்விற்கான ஒரு தகுதித் தேர்வு போல் ஆகிவிடும். இதன் மூலம் ஏழை, எளிய, கிராமப்புற மாணவ மாணவியர் கடுமையாக பாதிக்கப்படுவர். இந்த நுழைவுத் தேர்வுக்கு பெயரளவில் எதிர்ப்புத் தெரிவிக்காமல், இதனை திரும்பப் பெறத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை தி.மு.க. அரசு உடனடியாக எடுக்க வேண்டும். இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பு தி.மு.க. அரசுக்கு உண்டு-என்றார். (அ)

## வாழ்வோரின் கடவுள்



நாம் இறந்தோரின் கடவுள் அல்லர் வாழ்வோரின் கடவுள்" என்று கூறிய கடவுள் "இருப்பவர் நாமே" என்று தன்னை இஸ்ராயேல் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதை தொடக்க நூல் எடுத்துக்கூறுகின்றது.

இயேசு வாக்களிக்கப்பட்ட மெசியா. கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பாவத்தில் விழுந்து மடிகின்றார்கள். அவர்களை மீட்கவே இயேசு இவ்வுலகிற்கு தந்தையால் அனுப்பப்பட்டார். "தமக்குரிய இடத்திற்கு வந்தார். அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

(யோவா 1:1)

இயேசு தான் வாக்களிக்கப்பட்ட மெசியா என்பதைருபவ் தான் தந்தையிடம் வாழும் வார்த்தை என்பதைருபவ் தானும் தந்தையும் ஒன்று என்ற உண்மையை வெளிப்படுத்தும் பகுதியே இன்றைய நற்செய்தியாகும். "நான் என் தந்தையிடம் செல்லுகின்றேன் : என்னை வெறுப்போர் என் தந்தையையும் வெறுக்கின்றனர். (யோவா 15:23) என்று கூறும் இயேசு பலமுறை தன்னையும் தந்தையையும் பற்றி தெளிவாகக் கூறியும்

யூதத்தலைவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் "இருக்கின்றவர் நானே என்பதை நீங்கள் நம்பாவிடில் நீங்கள் பாவிகளால் சாவீர்கள்" என்றார் இயேசு. இப்படி தன்னையே இறைமகன் என்று எடுத்துரைத்தும் அவரை ஏற்க மறுத்தவர்கள் உண்மையில் பாவத்தில் மடிபவர்கள்.

எனவே நிலையில்லா உலகில் வாழும் நாம் நிலையான இறைவனில் நம்பிக்கை கொள்வோம். இத் தவக்காலத்தில் எம்மை ஆராய்ந்து பார்த்து நான் யாருக்கு சொந்தம்? இறைவனுக்கா? அல்ல பாவத்துக்கா? ஏன்பதை கண்டு பிடிப்போம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# ஆட்சியை தொடர நினைத்தாலும் இனிப் பெரும்பான்மை இருக்காது

## பெரமுனவின் நிமல் லான்ஸா எம்.பி.

கொழும்பு, ஏப். 05

**பொதுமக்களின் கோரிக்கையை புறக்கணித்து ஆட்சியைத் தொடர இந்த அரசு முடிவு செய்தால் 50 இற்கும் மேற்பட்ட ஆளும் கட்சி எம்.பிக்கள் அரசில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயேச்சையாக செயற்படுவார்கள் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்ஸா தெரிவித்தார்.**

இதன்மூலம் பாராளுமன்றில் ஆட்சியில் நீடிக்க தேவையான 113 உறுப்பினர்கள் என்ற சாதாரண பெரும்பான்மையை அரசு இழக்கும் என்பது உறுதி என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு நீர்கொழும்பில் உள்ள நிமல் லான்ஸாவின் இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இரவு 10:45 மணியளவில் நிமல் லான்ஸாவின் வீடு முன்பாக ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் நள்ளிரவைத் தாண்டியும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தி பொலிஸார் கடும் பிரயத்தனம் செய்தனர்.

அதன் பின்னர், ஆர்ப்பாட்டக்காரர்கள் நீர்கொழும்பு மேயர் தயான் லான்ஸாவின் இல்லத்துக்குச் சென்று தங்கள் கோபத்தையும் விரக்தியையும் வெளிப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சர்கள் பதவி விலகல் கோட்டா அரசின் நாடகமா?

## சட்ட வலுவற்றது என்கிறார்கள் வல்லுநர்கள்

கொழும்பு, ஏப். 05

பிரதமர் தவிர்ந்த அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் நேற்று நள்ளிரவு கூண்டோடு தமது பதவி விலகல் கடிதங்களை பிரதமரிடம் கையளித்த நிலையில் இந்த பதவி விலகல் சட்ட ரீதியாக செல்லுபடியற்றது என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசியலமைப்பு பிரிவு 47(2)(பி) இன் படி அமைச்சரவை அமைச்சர்கள் பதவி விலகும் முடிவை எழுத்து பூர்வமாக ஜனாதிப திக்கே சமர்ப்பிக்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சர்கள் தங்கள் ராஜினாமாக் கடிதங்களை பிரதமரிடம் கையளித்துள்ள நிலையில் அது சட்ட வலுவற்றது எனவும், இது அரசின் மற்றொரு நாடாகமாக இருக்கலாம் எனவும் சட்ட வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், பிரதமர் பதவியில் தொடரும் வரை அரசியலமைப்பின் 49ஆவது பிரிவின் படி அமைச்சரவை கலைக்கப்பட்டதாகக் கருதப்படாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# இடைக்கால அரசு என்பது உட்கட்சி அரசியல்தான்

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஏப். 05

இடைக்கால அரசு என்பது உள்கட்சி அரசியலைத் தவிர வேறில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புதிய இலங்கையானது வலுவான மாற்றங்களுடனேயே அடுத்த கட்டத்தை நோக்கி நகரவேண்டும். வெறும் தலைமை மாற்றங்களுடன் மட்டுமல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இரவு பிரதமர் தவிர்ந்த அனைத்து அமைச்சர்களும் தங்கள் ராஜினாமா கடிதங்களை பிரதமரிடம் கையளித்த நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகத் தீர்மானித்துள்ள போதும், பிரதமர் இன்னமும் பதவியில் தொடர்கிறார். தலைமை அமைச்சர் பதவி விலகாததால் அமைச்சரவை முழுமையாக கலையவில்லை என்பதே பொருளாகும். இவ்வாறான நிலையிலேயே வலுவான மாற்றம் வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# வவுனியாவில் மண்ணெண்ணெய் பெற நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்கள்!

வவுனியா, ஏப். 05

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமையால் எரிபொருட்களை பெற்றுக்கொள்ள மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை முதல் விவசாய தேவை உட்பட வீட்டுத் தேவைக்கும்மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

பெண்கள் மற்றும் வயோதிபர்கள் சிறுவர்கள் எனப் பலரும் மண்ணெண்ணெய்க்கு காத்திருந்த நிலையில், மின்சாரத் தடை காரணமாக நீண்ட நேரமாக எரிபொருளை வழங்காத நிலை காணப்பட்டதுடன் சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லாத நிலையும் காணப்பட்டது.

இதேவேளை, வாகனங்களும் டீசலை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்தபோதிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இல்லாத நிலை நேற்று காலை காணப்பட்டது. (அ)

# நீக்கப்பட்டது ஊரடங்கு!

கொழும்பு, ஏப். 05

நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6.00 மணிக்கு நீக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை மாலை 6.00 மணி முதல் நேற்று காலை 6.00 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அமைதி, பொது மற்றும் தனியார் சொத்துக்களை பாதுகாக்கும் வகையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட காலப்பகுதியில், ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் பலரை பொலிஸார் கைதுசெய்தனர்.

எவ்வாறாயினும், ஊரடங்குச் சட்டத்தின்போது நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேராசிரியர் சோ. சந்திரசேகரன் மாராடைப்பினால் காலமானார்

கொழும்பு, ஏப். 05



கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் பீடத்தின் சமூக விஞ்ஞான கல்வியியல்துறையின் ஓய்வு நிலை பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தமது 78ஆவது வயதில் நேற்று முன்தினம் மாலை காலமானார்.

காலி -பலப்பிட்டிய என்ற இடத்தில் உள்ள விருந்தகம் ஒன்றில் தங்கியிருந்தபோதே மாரடைப்பால் காலமானதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

1944 டிசம்பர் மாதம் பிறந்த பேராசிரியர் சந்திரசேகரம், இலங்கையின் தமிழ் கல்வி வரலாற்றில் பாரிய பங்களிப்புக்களை செய்தவராவார்.

பதுளையை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர். கல்வியியல் துறையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் ஹிரோசிமா பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரியாவார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை முன்னாள் பீடாதிபதியாகவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவராகவும் மற்றும் கொழும்பு தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் அவர் பணியாற்றினார். தனது கல்வியியல் துறை விரிவுரையாளர் பணியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்தார்.

தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் புலமை கொண்டவர் என்பதுடன் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.

மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்மொழிந்தவர்களுள் முக்கியமானவராவர். (அ)

# நாட்டின் வங்கித்துறை மிகப்பெரும் ஆபத்தில்!

## ரணில் எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 05

நாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடி குழப்பமடைந்து அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் வங்கித் துறையும் ஆபத்தில் இருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், அரசாங்கத்தின் அதிகாரத்துவ ஆயுதங்கள் வெவ்வேறு திசைகளில் செல்வதால் பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது.

மத்திய வங்கி போன்ற நிறுவனங்கள் ஒரு திசையில் செல்கின்றன. ஏனைய நிறுவனங்கள் மற்றொரு திசையில் செல்கின்றன.

மேலும், இந்தியாவிடம் இருந்து பெறும் கடன் சில வாரங்களுக்கு மட்டுமே நாட்டை காப்பாற்றும். இலங்கை மண்ணில் ஏற்கனவே எண்ணெய் ஏற்றுமதி உள்ளது. ஆனால் விலைகள் இரட்டிப்பாகலாம்.

அதிகபட்சமாக ஐந்து முதல் ஆறு வாரங்களுக்கு இந்திய கடன் இலங்கைக்கு உதவும்- என்றார். (அ)

# இடைக்கால அரசில் நாம் அங்கம் வகிக்கமாட்டோம்

## சஜித் தரப்பு திட்டவட்டம்



**கொழும்பு, ஏப். 05**

**"இடைக்கால அரசில் அங்கம் வகிக்கமாட்டோம் அதற்கு ஆதரவும் வழங்கமாட்டோம்." - இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கும், உள்ளக மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், மக்களை ஏமாற்றுவதற்காகவுமே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இடைக்கால அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இடைக்கால அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ளன. (அ)

# அவசரகால சட்டத்தை எதிர்க்க பிரதான எதிர்க் கட்சிகள் முடிவு

கொழும்பு, ஏப். 05

அவசரகால சட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஜனநாயகத்துக்கும், மனித உரிமைகளுக்கும், இச்சட்டம் அச்சுறுத்தலாக இருப்பதாகவும், அரசியல் தேவைகளுக்காகவே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மேற்படி கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி, தொடர் மின்வெட்டு மற்றும் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் அரசுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் தன்னெழுச்சிப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அரசியல் கட்சிகளும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையிலேயே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த முடிவை ஜனாதிபதி மீளப்பெறவேண்டும் என கட்சிகள் வலியுறுத்தின. சிவில் அமைப்புகளும் அழுத்தம் கொடுத்தன. எனினும், ஜனாதிபதி மீளப் பெறவில்லை.

பாராளுமன்றம் இன்று கூடுகின்றது. எனவே, பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் நிராகரித்தால் அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்படும். (அ)

# எரிபொருள் விநியோகம் தொடர்பில் மன்னாரில் நேற்று கலந்துரையாடல்!

மன்னார், ஏப். 05

மன்னார் மாவட்டத்தில் தடைகள் இன்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருட்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அரச,தனியார் போக்குவரத்துச் சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பினர், பிரதேச செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின் தடங்கள் அமுலாக்க பட்டுள்ள நிலையில் மாவட்டத்துக்கு தேவையான எரிபொருட்களை சீரான வகையில் சகல தரப்பினருக்கும் உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு அரச அதிபர் நன்றிகளை தெரிவித்தார்.



மாவட்டத்தில் உள்ள உள்ள மீனவர்களுக்கு கடல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடிப் படகு மற்றும் ட்ரோலர் படகுகளுக்கு தேவையாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு அமைய மாவட்டத்தில் உள்ள மீனவ அமைப்புகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரி பொருளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தில் திடீரென மின் தடை ஏற்படுகின்றபோது உடனடியாக அவசர தேவைகளுக்கு எரிபொருளை வழங்கவும்,குறிப்பாக மாவட்ட வைத்தியசாலைக்கு தேவையான எரிபொருளை சிரமங்கள் இன்றி பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் அரச தனியார் பஸ்களுக்கு உரிய வகையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இன்றி உரிய முறையில் எரிபொருளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அரச அதிபர் கோரிக்கை விடுத்தார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் வசிக்கும் வீடமைப்பு தொகுதிக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 05

பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதிவெலவிலுள்ள வீடமைப்பு தொகுதியின் பாதுகாப்புக்கென பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கு மேலதிகமாக இந்த வீடமைப்புத் தொகுதிக்கு அருகில் புலனாய்வுப் பிரிவினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். (அ)

# புதிய பிரதமராகிறாரா சஜித்? ஐக்கிய மக்கள் சக்தி விளக்கம்

கொழும்பு, ஏப். 05

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் என சமூக ஊடகங்களில் பரப்பப்படும் ஆவணம் போலியானது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, கட்சியின் பெயர் பதிக்கப்பட்ட ஆவணத்தில் தனது கையொப்பத்துடன் பரப்பப்படும் செய்தி தவறானது என கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உள்ளடக்கிய அரசாங்கத்தில் எந்த பதவியையும் ஏற்க நாங்கள் தயாராக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெயர் பதிக்கப்பட்ட ஆவணத்தில் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் என்ற செய்தி சமூக ஊடகங்களில் பரவியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அவசரகால சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பேன்

## ஆளுங்கட்சி உறுப்பினர் சந்திம வீரக்கொடி

கொழும்பு, ஏப். 05

"பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்பேன்."

- இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி அறிவித்தார்.

"நாட்டில் தற்போது போர் இல்லை. எனவே, ஜனநாயகத்தை ஒடுக்க அவசரகால சட்டம் பயன்படுத்தப்படுவது தவறு" எனவும் ஊடகங்களிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அனுரபிரியதர்ஷன யாப்பாவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (அ)

# இடைக்கால அரசில் நாம் அங்கம் வகிக்கமாட்டோம்

## சஜித் தரப்பு திட்டவட்டம்



**கொழும்பு, ஏப். 05**
**"இடைக்கால அரசில் அங்கம் வகிக்கமாட்டோம் அதற்கு ஆதரவும் வழங்கமாட்டோம்."**
**- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கும், உள்ளக மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், மக்களை ஏமாற்றுவதற்காகவுமே இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இடைக்கால அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இடைக்கால அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ளன. (அ)

# நாட்டின் வங்கித்துறை மிகப்பெரும் ஆபத்தில்!

## ரணில் எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 05

நாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடி குழப்பமடைந்து அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் வங்கித்துறையும் ஆபத்தில் இருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், அரசாங்கத்தின் அதிகாரத்துவ ஆயுதங்கள் வெவ்வேறு திசைகளில் செல்வதால் பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது.

மத்திய வங்கி போன்ற நிறுவனங்கள் ஒரு திசையில் செல்கின்றன. ஏனைய நிறுவனங்கள் மற்றொரு திசையில் செல்கின்றன.

மேலும், இந்தியாவிடம் இருந்து பெறும் கடன் சில வாரங்களுக்கு மட்டுமே நாட்டை காப்பாற்றும். இலங்கை மண்ணில் ஏற்கனவே எண்ணெய் ஏற்றுமதி உள்ளது. ஆனால் விலைகள் இரட்டிப்பாகலாம்.

அதிகபட்சமாக ஐந்து முதல் ஆறு வாரங்களுக்கு இந்திய கடன் இலங்கைக்கு உதவும்- என்றார். (அ)

# அவசரகால சட்டத்தை எதிர்க்க பிரதான எதிர்க் கட்சிகள் முடிவு

கொழும்பு, ஏப். 05

அவசரகால சட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஜனநாயகத்துக்கும், மனித உரிமைகளுக்கும், இச்சட்டம் அச்சுறுத்தலாக இருப்பதாகவும், அரசியல் தேவைகளுக்காகவே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மேற்படி கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி, தொடர் மின்வெட்டு மற்றும் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் அரசுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் தன்னெழுச்சிப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அரசியல் கட்சிகளும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையிலேயே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த முடிவை ஜனாதிபதி மீளப்பெறவேண்டும் என கட்சிகள் வலியுறுத்தின. சிவில் அமைப்புகளும் அழுத்தம் கொடுத்தன. எனினும், ஜனாதிபதி மீளப்பெறவில்லை.

பாராளுமன்றம் இன்று கூடுகின்றது. எனவே, பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் நிராகரித்தால் அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்படும். (அ)

# எரிபொருள் விநியோகம் தொடர்பில் மன்னாரில் நேற்று கலந்துரையாடல்!



மன்னார், ஏப். 05

மன்னார் மாவட்டத்தில் தடைகள் இன்றி அரச மற்றும் தனியார் துறையினருக்கு எரிபொருட்களை சீரான முறையில் விநியோகிப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அரச,தனியார் போக்குவரத்துச் சங்கம், மீனவ அமைப்புகள், வெதுப்பக உரிமையாளர்கள், எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர்கள், மன்னார் மின்சார சபை அத்தியட்சகர், மன்னார் வைத்தியசாலை தரப்பினர், பிரதேச செயலாளர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின் தடங்கள் அமுலாக்க பட்டுள்ள நிலையில் மாவட்டத்துக்கு தேவையான எரிபொருட்களை சீரான வகையில் சகல தரப்பினருக்கும் உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு அரச அதிபர் நன்றிகளை தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள உள்ள மீனவர்களுக்கு கடல் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன்பிடிப் படகு மற்றும் ட்ரோலர் படகுகளுக்கு தேவையாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கு அமைய மாவட்டத்தில் உள்ள மீனவ அமைப்புகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வெதுப்பகங்களுக்கும் உரிய முறையில் எரி பொருளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தில் திடீரென மின் தடை ஏற்படுகின்றபோது உடனடியாக அவசர தேவைகளுக்கு எரிபொருளை வழங்கவும்,குறிப்பாக மாவட்ட வைத்தியசாலைக்கு தேவையான எரிபொருளை சிரமங்கள் இன்றி பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் அரச தனியார் பஸ்களுக்கு உரிய வகையில் எரிபொருளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்களுக்கு எவ்வித அசௌகரியங்களும் இன்றி உரிய முறையில் எரிபொருளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அரச அதிபர் கோரிக்கை விடுத்தார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் வசிக்கும் வீடமைப்பு தொகுதிக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 05

பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதிவெலவிலுள்ள வீடமைப்பு தொகுதியின் பாதுகாப்புக்கென பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கு மேலதிகமாக இந்த வீடமைப்புத் தொகுதிக்கு அருகில் புலனாய்வுப் பிரிவினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். (அ)

# புதிய பிரதமராகிறாரா சஜித்? ஐக்கிய மக்கள் சக்தி விளக்கம்

கொழும்பு, ஏப். 05

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் என சமூக ஊடகங்களில் பரப்பப்படும் ஆவணம் போலியானது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, கட்சியின் பெயர் பதிக்கப்பட்ட ஆவணத்தில் தனது கையொப்பத்துடன் பரப்பப்படும் செய்தி தவறானது என கூறினார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உள்ளடக்கிய அரசாங்கத்தில் எந்த பதவியையும் ஏற்க நாங்கள் தயாராக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெயர் பதிக்கப்பட்ட ஆவணத்தில் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார் என்ற செய்தி சமூக ஊடகங்களில் பரவியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அவசரகால சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பேன்

## ஆளுங்கட்சி உறுப்பினர் சந்திம வீரக்கொடி

கொழும்பு, ஏப். 05

"பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்பேன்."

- இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி அறிவித்தார்.

"நாட்டில் தற்போது போர் இல்லை. எனவே, ஜனநாயகத்தை ஒடுக்க அவசரகால சட்டம் பயன்படுத்தப்படுவது தவறு" எனவும் ஊடகங்களிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அனுரபிரியதர்ஷன யாப்பாவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (அ)

# பதவியை துறந்தது ஏன்? நாமல் எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஏப். 05

அரசுக்கு எதிரான மக்களின் போராட்டத்துக்குத் தலை வணங்கி அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளேன் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்த நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு என்றுமில்லாத பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இன்னமும் உரிய தீர்வு காணப்படவில்லை. இதற்கு ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவைதான் பொறுப்பு கூறவேண்டும்.

பொருளாதார நெருக்கடியால் மக்கள் மிகவும் கொதிப்படைந்துள்ளனர். அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கி அவர்கள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், மக்களின்



போராட்டத்துக்குத் தலை வணங்கியும், புதிய அமைச்சரவையை நியமிக்குமாறு வலியுறுத்தியும் அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளேன்.

புதிய அமைச்சரவை தொடர்பிலும், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு குறித்தும் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன்-என்றார். (அ)

# நாட்டின் தலைவராக இருக்க தகுதியற்றவர் கோட்டாபய!

## சாடுகிறார் அனுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, ஏப். 05

**அரசியல் கட்சிகளின் வழி நடத்தல் இன்றி வீதியில் இறங்கிப் போராடும் மக்கள் ஜனாதிபதி பதவி விலகி வீட்டுக்கு செல்லவேண்டும் என்றே கோருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



இதனால், அமைச்சரவையை மாற்றியமைப்பதன் மூலமோ அனைத்து கட்சிகள் இணைந்த கூட்டு அரசாங்கம் என்ற நாடகம் மூலமோ நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடைக்கால அரசாங்கமோ அல்லது வேறு அரசியல் நாடகங்களோ தொடர்ந்தும் செல்லுப்படியாகாது என்பதால், மக்களின் கோரிக்கைக்கு தலை வணங்கி, ஜனாதிபதி உடனடியாக பதவி விலகி வீட்டுக்கு செல்ல வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் வீதியில் இறங்க முடியாத நபர் தொடர்ந்தும் நாட்டின் தலைவராக செயல்பட தகுதியில்லை-என்றார். (அ)

# வவுனியாவில் ஆர்ப்பாட்டகாரரர்கள் மீது குப்பைகளை எறிந்தமையால் பரபரப்பு!

வவுனியா, ஏப். 05

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இளைஞர்கள் சிலர் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சிங்களவர் கிளர்ந்தெழுந்ததால் நீ வீட்டுக்குப் போ, பருப்பு விலை வானமளவு, எரிவாயுவை காண கிடைக்கவில்லை என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் இளைஞர்கள் ஈடுபட்ட வேளை அவர்களின் பின்புறமாக நின்ற இளைஞரொருவர் குப்பைகள் அடங்கிய பெட்டியொன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தூக்கி வீசினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டபோதிலும் இளைஞர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்ததுடன் சிறிது நேரத்தில் போராட்ட இடத்துக்கு மறுமுனையில் இருந்த எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# யாழ். பல்கலையில் மறுஅறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டது கல்வி நடவடிக்கை

## விடுதி மாணவர்களை வீட்டுக்கு செல்ல அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 05

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவிப்பு்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று காலை இடம்பெற்ற பீடாதிபதிகள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மாணவர் நலன்கருதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதுடன், விடுதிகளில் தங்கி நிற்கும் மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் பரீட்சை மற்றும் அத்தியாவசிய ஆய்வு நடவடிக்கைகளுக்காக மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவர்களுக்கு மாத்திரம் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)


# இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் கடன் கொடுக்கமுடியாத நிலையில் பாகிஸ்தான்!

கொழும்பு, ஏப். 05

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக பாகிஸ்தானினிடமிருந்து கோரப்பட்டிருந்த 200 மில்லியன் டொலர் கடன் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

பாகிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்



கடி காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே அமைச்சர் பந்துல குணவர்த்தன பாகிஸ்தானுக்கு சென்று அந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் திட்டங்களை முன்வைத்ததுடன் கடனையும் கோரியிருந்தார்.

இதேவேளை, பங்களாதேஷிடம் ஏற்கனவே 200 மில்லியன் டொலர்களை பெற்று அதனை திருப்பிச்செலுத்துவதற்கான காலத்தை நீடித்துள்ள இலங்கை, மீண்டும் அந்த நாட்டிடம் இருந்து 200 மில்லியன் டொலர்களை கோரியுள்ளது.

எனினும் இன்னும் அந்த நாடு உரிய பதிலை வழங்கவில்லை. (அ)

# அரசாங்கத்தை தூக்கி எறியுங்கள் ஆனால் நாட்டை கவிழ்க்காதீர்கள்!

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, ஏப். 05

"நீங்கள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக இருந்தால், அரசாங்கத்தை தூக்கி எறியுங்கள், ஆனால் நாட்டைக் கவிழ்க்காதீர்கள்" என அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் முன்னிலையில் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

74 வருடங்களாக பாதுகாக்கப்பட்ட ஜனநாயகத்தை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பு எனவும், மிரிஹான ஜனாதிபதி இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இடம்பெற்ற வன்முறைகளை மன்னிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை தானும் ஏற்றுக் கொள்வதாகவும், மக்களின் எதிர்ப்பில் நியாயம் இருப்பதாகவும் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.



இதேவேளை, வட்ஸ்அப், வைபர், முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை தடை செய்வது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அழகப்பெரும, இது அரசியல் ரீதியில் தேவையற்ற தீர்மானம் என தெரிவித்தார். வட்ஸ்அப், வைபர், பேஸ் புக் போன்ற சமூக வலைதளங் களை தடை செய்யும் முடிவுக்கு தானும் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறிய அவர், இது நவீன தொழில் நுட்பம் தெரியாத ஒரு குழுவால் எடுக்கப்பட்ட முடிவு என்றும் கூறினார். (அ)

# அவசரகாலச் சட்டம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி

கொழும்பு, ஏப். 05

அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு, ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

மேலும் இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் நிலைமையை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசர நிலைமை ஏற்பட்டுள்ளமை இலங்கை மக்களுக் கேயன்றி அரசாங்கத்திற்கு அல்ல. மக்கள் எதிர்கொண்டுள்ள அவசரகால நிலைமையின் அடிப்படையிலேயே அவர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். மாறாக அவர்கள் வீதிக்கு இறங்கியமையால் அவசரகால நிலைமை ஏற்படவில்லை என்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் தனது பதிவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# இந்திய அரசியலில் காங்கிரஸ் கட்சி அர்த்தமற்றதாகின்றதா?

**நியூசிலாந்து சிற்சபேசன்**

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் அடுத்த இரண்டாண்டுகளில் நடைபெறவுள்ளது. அத்தகையதொரு சூழலிலேயே, அண்மையில் நடைபெற்ற ஐந்து மாநிலச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அதிககவனத்தைப் பெறுகின்றன.

அவற்றிலே உத்தரபிரதேசம், உத்தராகண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய நான்கு மாநிலங்களில் ஆளுங்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியே ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றது. கடந்த 2019 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்திலே நடைபெற்ற பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு ஒன்றியப் பிரதேசங்களுக்கான சட்டமன்றத் தேர்தல்களில், ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியினால் நான்கு மாநிலங்களில் மட்டுமே ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. தற்போது மேலும் நான்கு மாநிலங்களில் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

இந்தியாவிலே அதிக சனத்தொகையைக் கொண்டதே உத்திரப்பிரதேசமாகும். அதனால் அதிபட்சமான பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். அகில இந்தியத்தேர்தல் முடிவுகளுக்கான வெள்ளோட்டமாகவே உத்தரப்பிரதேசத் தேர்தல் முடிவுகள் கருதப்படுகின்றன. அந்தவகையிலேயே, பாரதீய ஜனதாக் கட்சிக்கு அங்கே கிடைத்திருக்கின்ற தேர்தல் வெற்றி கவனிப்பைப் பெறுகின்றது.

மறுவளத்தில், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி எதிர்கொள்ளும் தோல்விகள் நீண்டுகொண்டே செல்கின்றன. பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் ஆளும் பாரதீய ஜனதா வலுவடைந்துள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சி துல்லியமாகத் தெரிகின்றது. அண்மையிலே நடைபெற்ற ஐந்து மாநிலத் தேர்தலிலேயும் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் தோல்விக்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

காங்கிரஸ் கட்சியின் கனாக்காலம் இந்திராகாந்தியுடன் முடிந்துவிட்டதாகவே கருதமுடிகின்றது. இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின்னர் நடைபெற்ற முதலாவது தேர்தலிலே, அனுதாபஅலையே வெற்றிக்கு காரணமாகியது. அதன்பின்னர், காங்கிரசினால் தனித்து ஆட்சி அமைக்க முடியவில்லை. 2014ல் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைத்தது. அதன் பின்னர் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் தோல்விகள் அதிகரித்தே வருகின்றன.

இத்தகைய பின்னணியிலேயே, காங்கிரஸ் கட்சியின் வரலாறு கவனிப்பைப் பெறுகின்றது. ஆட்சி அதிகாரத்திலே இந்தியர்களும் பங்குகொள்ளல் வேண்டும் என்னும் சிந்தனை, இந்தியர்களிடையே கனதியாக எழுவதற்கு முன்னரேயே, பிரித்தானியா முற்போக்கு சிந்தனையாளர்களிடம் ஏற்பட்டது. அத்தகைய சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்தவர்களிலே இளைப்பாறிய சிவில்சேவை அதிகாரியான அலன் ஹியும் குறிப்பிடத்தக்கவர். அவ்வாறானவர்களின் முயற்சியினாலேயே 1885 டிசம்பரில் இந்தியத் தேசியக் காங்கிரஸ் பம்பாயில் பூர்வாங்கமாக கூடியது. அதுவே காங்கிரஸ் கட்சியின் ஆரம்பமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலேயே இந்தியத் தேசியக் காங்கிரஸ் மக்கள் மயப்பட ஆரம்பித்தது. கோபாலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர் போன்றோர் தீர்க்கமான வழித்தடங்களை அடையாளப்படுத்தினர். மகாத்மா காந்தியின் வருகை புதிய களங்களைத் திறந்தது. இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் உந்தித்தள்ளபட்டது.

இந்தியா சுதந்திரமடைந்தபோது, இந்தியத் தேசியக் காங்கிரசே ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அதன்பின்னர், 1969 ல் முதலாவது பாரிய பிளவை எதிர்கொண்டது. இந்திராகாந்தி தலைமையிலான அணி வலுவடைந்து இந்திரா காங்கிரஸ் ஆகியது. காலப்போக்கில், பெயரில் மாற்றங்கள் ஏற்பட்டன. தற்போது அகில இந்திய காங்கிரஸ் கட்சி என்றே அழைக்கப்படுகின்றது.

இத்தகைய பாரம்பரியம் கொண்ட காங்கிரஸ் கட்சி, வெகுசன வசீகரம் கொண்ட தலைவர்களாலேயே கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது. இந்தியா பிரமாண்டமான நிலப்பரப்பு. அளப்பரிய பன்மைத்துவம் கொண்ட தேசமாகும். அதிலே வெகுசன வசீகரத்தை வளர்த்தெடுப்பது சாதாரணமானதல்ல.

சுதந்திரப் போராட்டக் காலத்திலே மக்களை ஒன்றுதிரட்டக்கூடிய வசீகரத்தை மகாத்மா காந்தி கொண்டிருந்தார். மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே புதியபாதையை உருவாக்கினார். வன்முறையை முற்றிலும் தவிர்த்தார். அகிம்சையை முன்வைத்தார். மகாத்மா காந்தியின் வசீகரமே தேசத்தின் விடுதலைக்கு பாதையமைத்தது.

தேசத்தின் விடுதலை, இந்தியப்-பாகிஸ்தான் பிளவு, மகாத்மா காந்தியின் கொலை போன்ற சம்பவங்கள் ஏற்படுத்திய அசாதாரண சூழ்நிலைகளிலேயும் ஜவஹர்லால் நேருவின் தலைமைக்கு ஒரு வசீகரத்தன்மை ஏற்பட்டிருக்கலாம். அத்தகைய நேருவின் வசீகரமே சுதந்திர இந்தியாவின் ஆரம்பகாலங்களுக்கு வழிகாட்டியாகியது.

அதன்பின்னரான காலங்கள் மிதமிஞ்சிய சவால்களைக் கொண்டதாகும். இந்திய-சீனா யுத்தத்தின் விளைவுகள், பாக்கிஸ்தான் மற்றும் காஷ்மீர் விவகாரம், சோவியத்-அமெரிக்க முறுகல், காங்கிரசில் பிளவு எனப் பல சவால்கள் காணப்பட்டன. அத்தகைய சூழலிலே, இந்திராகாந்தி சவால்களைச் சமாளித்தார். தலைவராக ஏற்றமடைந்தார். வசீகரமான தலைவியாக மிளிர்ந்தார். நேருவின் மகள் என்பது மேலதிகமான தகுதியாகியது.

நெடுங்கால உழைப்பின் பெறுபேறாகவே பாரதீய ஜனதாக் கட்சி தற்போது முக்கிய சக்தியாகியுள்ளது. வெகுசன அரசியலில் வாஜ்பேய், அத்வானி போன்ற தலைவர்களின் உழைப்பு அத்திவாரமாகியது. பிரதமர் மோடி குஜராத் மாநிலத்தவர். ஹிந்தியை தாய்மொழியாகக் கொள்ளாதவர். ஹிந்தி வட்டத்துக்கு வெளியேயிருந்து வசீகரமான தலைமை உருவாகாது என்னும் பிம்பத்தை உடைத்துள்ளார். வசீகரமான தலைவராக எழுச்சியடைகின்றார்.



மறுவளத்தில், காங்கிரஸ் கட்சியோ வசீகரமான தலைமையின்றித் தவிக்கின்றது. நேரு, காந்தி வாரிசு அடையாளமே வசீகரத்தை ஏற்படுத்திவிடும் என்னும் எதிர்பார்ப்பு பொய்த்திருக்கின்றது. நேருவின் மகள் என்பதற்கு அப்பால், வசீகரமான தலைவியாக மிளிர்வதற்கு இந்திரா காந்தி கடுமையாக உழைத்தார். இந்திரா காந்தியின் காலத்துக்குப் பின்னர் வசீகரமான தலைமை காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்கவில்லை. ஆகக்குறைந்தது, அர்ப்பணிப்பான முழுநேரத் தலைமைகூட தற்போது கட்சிக்குக் கிடையாது. அதனாலேயே, இந்திய அரசியலில் காங்கிரஸ் கட்சி அர்த்தமற்றதாகின்றதா என்னும் கேள்வி எழுகின்றது.



பனங்காட்டான்

# 69 லட்சம் சிங்கள வாக்குகள் உருவாகி வரும் ராணுவ ஆட்சியை ஏற்படுத்துமா? கலைக்குமா?

கடந்த சில நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வுகள் கொழும்பை மையப்படுத்தி ஆரம்பித்துள்ளன.

69 லட்சம் சிங்கள மக்களால் ஜனாதிபதி கதிரையில் தாம் அமர்த்தப்பட்டதாக அடிக்கடி கூறி தம்பட்டம் அடித்து வந்த கோட்டாபயவின் மிரிகான - பங்கிரிவத்தையிலுள்ள இல்லம், அதே சிங்கள மக்களால் சுற்றி வளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாக ஆரம்பச் செய்திகள் வெளியாகின.

கோட்டாபய வெளியே வா, கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவோம், கோட்டாபய பதவி விலக வேண்டும் என முழக்கமிடும் கோக்ஷங்களால் அந்தப் பிரதேசம் அதிர்ந்தது. ஐந்தடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டும் பாதுகாப்பின்மையால் கோட்டாபய வேறிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரியவந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது குண்டாந்தடி, கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பதிலுக்கு கோட்டாபயவின் இல்லத்தை பாதுகாக்கச் சென்ற ராணுவ வண்டி தீக்கிரையாக்கப்பட்டது. சஜித் பிரேமதாசவை ஆட்சிக்குக் கொண்டு வர தாங்கள் போராடவில்லையென்ற குரலும் அங்கு எழுப்பப்பட்டது.

அப்படியானால் இவர்கள் விரும்பும் அடுத்த ஆட்சியாளர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. அண்மையில் அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களையா இவர்கள் விரும்புகிறார்கள்.

கொழும்பில் ஆர்ப்பாட்டம் கட்டை மீறியதால் முக்கியமான பகுதிகளிலும், நுகேகொடவிலும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. சிறுபான்மையின மக்கள் கூடுதலாக வாழும் கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, கொழும்பு வடக்கு ஆகியவை ஊரடங்குப் பகுதிகள் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

சில நாட்களுக்கு முன்னர் கொழும்பின் அருகிலுள்ள நுகேகொடவில் சுமார் முப்பதினாயிரம் பேர் கலந்து கொண்ட அரச எதிர்ப்பு பேரணியொன்றை ஜே.வி.பி. நடத்தியது. இதற்கு மிக அருகாமையில் தான் கோட்டாபயவின் இல்லம் அமைந்துள்ளது. அதே நாட்களில்தான் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் குழுவினருடன் கோதபாயவும் மகிந்தவும் ஒரு சந்திப்பை நடத்தி தமிழரின் நான்கு அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடிவெடுத்ததாகவும் செய்திகள் வெளிவந்தன.

அவ்வேளை, விடுதலைப் புலிகளை சம்பந்தப்படுத்திய செய்தி ஒன்றும் தவறாமல் வந்தது. புலிகளின் இலக்கை அடைய கூட்டமைப்பு முயற்சி என்று, அண்மையில் அமைச்சர் பதவி பறிக்கப்பட்ட கம்மன்பில கூறியதானது சிங்கள இனவாதிகளை உசுப்பேற்றியிருக்கும்.

இவைகளுக்கு விடை காண முனையும் வேளையில், கோட்டாபயவை இலக்கு வைத்து அவரை முன்னர் ஆதரித்த சிங்கள மக்கள் திரண்டெழுந்திருக்கும் போராட்டம், இறுதியில் எவ்வாறு திசை திரும்பும் அல்லது திருப்பப்படும் என்ற அச்சம் கடந்த கால வரலாறுகளின் வழியாக ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

**தமிழரின் காணிகளை ராணுவமும் தொல்பொருள் திணைக் களமும் அபகரித்து வருவது கோட்டாபயவுக்குத் தெரியாதாம்! விடுதலைப் புலிகளின் இலக்கை அடைய கூட்டமைப்பு முனைகிறதாம்! பிளவுபடாத எக்கராஜ்ய எந்தளவுக்கு தமிழர் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும்?**

கோட்டாபய ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து பிரதான பதவிகளில் படையினரையே நியமித்துள்ளார். அதுவே இன்றும் தொடர்கிறது. ராணுவ ஆட்சியை நோக்கி நாடு நகர்கிறது என்பதை அரசியல் ஈடுபாடற்ற சாதாரண பாமரனால்கூட அவதானிக்க முடிகிறது.

தமக்கெதிரான சிங்கள் மக்களின் போராட்டம் நீளுமானால் ,தனையே தமக்கு சாதமாக்கி முழுமையான ராணுவ ஆட்சி ஒன்றை ஏற்ப டுத்த கோட்டாபய தயங்க மாட்டார். வாழ்நாள் பூராவும் துப்பாக்கியையே துடைத்து அதன் பளபளப்பில் அழகு பார்த்து, அதன் வில்லை இழுத்து மனித இரத்தத்தை உறைய வைத்த ஒருவரது மனப்பாங்கு எவ்வாறு இருக்கும் என்பதை விளக்க வேண்டியதில்லை.

பொதுவாக, சிங்கள ஆட்சியாளார்களிடையே பிரச்சனைகள் ஏற்பட்டால், அது இறுதியில் அப்பாவித் தமிழரையும் முஸ்லிம்களையும் பதம் பார்ப்பதாகவே முடியும். கொலை, கொள்ளை, உடைமைகள் எரிப்பு, அகதி வாழ்க்கை என்பவை கடந்த காலங்களில் சிறுபான்மை இன மக்கள் கற்றுக் கொண்டவை.

இன்று, கோட்டா பய என்ற ஒருவருக் கெதிராக என நடைபெறும் போராட்டம், இறுதியில் அப்பாவி சிறுபான்மை மக்களை அழித்தொழிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு சில நாடுகளுக்குண்டு. அதில் அமெரிக்காவும் சீனாவும் முக்கியமானவை.

சீனாவைப் பொறுத்தளவில் ராஜபக் சக்களை பாதுகாப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஆனால் அது சிறு பான்மை மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமானதாக இருக்காது.

இந்த நெருக்கடிக்குள், சம்பந்தன் தலைமையிலான தமிழர் தரப்பினர் கோட்டாபயவுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் நான்கு அம்சங்கள் ஏற்கப்பட்டதாக, அல்லது நடைமுறைப்படுத்தப்படுமென்று நம்பிக்கை அளிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலத்தில் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க உயரதிகாரி விக்டோரியா நோலன்ட் மகிழ்ச்சி தெரிவித்ததாக வெளியான தகவல், கோட்டாபயவின் திரைமறைவு நாடகத்தை மூடி மறைப்பதற்கு கிடைத்த முதல் வெற்றி.

இதனையடுத்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் மேற்கொண்ட கொழும்பு விஜயம் கோட்டாபயவின் மறைமுக திட்டத்துக்கு கிடைத்த இரண்டாவது வெற்றி மட்டுமன்றி அதற்கு வலுவூட்டியதாகவும் அமைந்தது.

ஜெய்சங்கர் முதலில் கோட்டாபயவை சந்தித்தார். தமிழர் தரப்புடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட நான்கு அம்சங்களை கோதபாய எடுத்துக் கூறினார். அரசியல் கைதிகள் பிரச்சனைக்கு சுமுகமான ஆராய்வு, தமிழரின் காணிகளை ராணுவமும் தொல்பொருள் திணைக்களத்தினரும் அபகரிப்பதை நிறுத்துவது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென ஒரு நிதியம் என்பவை இணக்கம் காணப்பட்ட நான்கு விடயங்களென கோட்டாபய தெரிவித்தவைகளை, அச்சொட்டாக சம்பந்தன் குழுவினரும் ஜெய்சங்கரை சந்தித்தபோது தெரிவித்தனர்.

இரு தரப்பினரும் ஒரே விடயத்தை ஒரே மாதிரியாகக் கூறியது அமைச்சர் ஜெய்சங்கருக்கு நிலைமையை சுகமாக்கிவிட்டது. இரு தரப்புக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டது நல்லது என்று ஜெய்சங்கர் கூறியதற்கு முழுமையான அர்த்தம் உண்டு. இனி இவ்விடயத்தில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கத் தேவையில்லை, நீங்களே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று இந்தியா விலகிக் கொள்வதாகக்கூட அர்த்தப்படலாம்.

தமிழரின் அரசியல் அபிலாசைகள் பற்றிப் பேச கோட்டாபய சம்பந்தன் தரப்பிடம் இரண்டு மாத தவணை கேட்டுள்ளார். புதிய அரசியலமைப்புத் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையை மொழிபெயர்க்க இரண்டு மாதம் தேவை என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியதால் சம்பந்தன் தரப்பும் அதனை ஏற்றுக்கொண்டது.

இதிலுள்ள முக்கியம் என்னவெனில், ஓர் அரசாங்கத்துக்கு அறிக்கையொன்றை மொழிபெயர்க்க இரண்டு மாதங்கள் தேவை என்பதும், அது ஏற்றுக்கொள்ளப்பட்டதும்தான். ஜெனிவாவில் செப்டம்பர் மாதம் இலங்கை சந்திக்கவிருக்கும் நெருக்கடியிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இவ்வாறான கால நீடிப்புகள் இலங்கைக்கு தேவை என்பதை சம்பந்தன் தரப்பினர் ஏனோ புரிந்து கொள்ளவில்லை, அல்லது அதனை புரிந்து கொண்டும் அதற்கேற்றவாறு அனுசரணையாக இருக்கின்றனர்.

இவர்களின் சந்திப்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான இன்னொரு அம்சமாக இருப்பது, தமிழர் காணிகள் அபகரிப்பைப் பற்றி கோட்டாபயவும் மகிந்தவும் எதுவுமே தெரியாதவர்கள்போல் நடித்துக் கொண்டது.

ராணுவம் காணியை அபகரிப்பது பற்றி சுமந்திரன் எடுத்துக்கூறிய போது - அவர்கள் எதற்காக காணிகளை சுவீகரிக்கிறார்கள் என்று கேட்டதும், தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் காணிகளை எடுப்பது பற்றிக் கூறிய போது - அவர்களின் வேலை தொல்பொருள் ஆய்வுதான் எதற்காக காணிகளை எடுக்கிறார்கள் என்று ஆச்சரியத்தோடு வினவியதும், கோட்டாபயவின் அதியுச்ச நடிப்பு.

இவ்வேளை சுமந்திரன் தரப்பு அதற்கான ஆதாரங்களை ஆவணங்களாகக் கொண்டு சென்றிருந்தால் அதனை பேச்சு மேசையில் தூக்கிப் போட்டு கோட்டாவின் முகத்தில் கரி பூசியிருந்திருக்கலாம். சும்மா பேச்சுக்குப் போனவர்கள்போல் வெறுங்கையோடு போனவர்களால் என்ன செய்ய முடியும்?

இவர்கள் பேச்சு முடிந்து வெளியே வந்தபோது, ராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் தமது பங்குக்கு சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு - ராணுவம் தமிழர் காணிகளை சுவீகரித்ததாகக் கூறினீர்களாமே, அது எங்கே என்று கேட்டது கோட்டாபயவை விஞ்சிய நடிப்பு.

மார்ச் மாதம் 25ம் திகதி சம்பந்தன் குழுவினரைச் சந்திப்பதற்கு முன்னர், சில கட்சியினரை சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் 23ம் திகதி கோட்டாபய சந்தித்தார். ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன தரப்பினரோடு சம்பந்தனும் சுமந்திரனும் இதில் பங்கு பற்றினர்.

இது தொடர்பான ஒளிப்பதிவு சமூக ஊடகங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளது. சுமந்திரனை கோட்டாபய உரையாற்றுமாறு அழைக்கும்போது short (சுருக்கமாக) என்று கூறுகிறார். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சுமந்திரன் ஒரு நிமிடம் மட்டுமே உரையாற்றினார்.

"இரண்டு நாட்களின் பின்னர் நாங்கள் சந்திக்கவிருப்பதால், அப்போது அந்த விடயங்களை பேசுவோம். நாங்கள் ஒன்றாக இணைந்து இது ஒரு நாடு, இந்த நாட்டில் எங்களுக்கும் ஈடுபாடு உண்டு, இந்த நாட்டின் நலனில் நாம் இணைந்து பணியாற்றலாம்" (How can we go forward together as one Country; we are committed to this country. We will work for the welfare of this country) என்று வேறெவரும் குறிப்பிடாத எக்கராஜ்ய என்ற சிந்தனையை சுமந்திரன் மட்டும் இங்கு வெளிப்படுத்தி, அதுவே தமிழரின் தாகம் என்பதுபோல் காட்டிக் கொண்டார்.

நல்லாட்சிக் காலத்திலிருந்து இதனையே தமது வாய்ப்பாடாகக் கொண்டிருக்கும் சுமந்திரன், இலங்கையின் சிதைந்து போன பொருளாதாரத்திலிருந்து மீள கோட்டாபய கூட்டிய மாநாட்டில் மறவாது தமது விசுவாசத்தைக் காட்டியுள்ளார்.

நான்கு அம்ச இணக்கம், புதிய அரசியலமைப்பு, நட்பு நாடுகளின் ஆதரவுப் பங்களிப்பு என்பவை, புதிதாக உருவாகியிருக்கும் கோட்டாபயவுக்கு எதிரான 69 லட்சம் சிங்கள வாக்குகளின் முன்னால், எந்தளவுக்கு தாக்குப்பிடிக்கப் போகிறது என்பதை அடுத்த வாரங்கள் பதிலளிக்கும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................. (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) தனிச்சொல்லை எழுதுக.


i) வீண் செலவு செய்பவன் : ................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................. (2 புள்ளிகள்)

11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ........................................................................................ (2 புள்ளிகள்)

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) ரோஹல : ............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ விடை எழுதுக.

16) 


| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

...............................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

...............................................................................

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? .................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

---

கல்வி tv CHANNEL-1

**05.04.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**05.04.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் |
|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் |
| 06.45 | PLAY GROUP |
| 07.30 | முன்பள்ளி |
| 08.15 | தரம்-01 |
| 09.00 | தரம்-02 |
| 09.45 | தரம்-03 |
| 10.30 | தரம்-03 |
| 11.15 | தரம்-04 |
| 12.30 | தரம்-04 |
| 01.15 | தரம்-05 |
| 02.00 | தரம்-05 |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP |
| 04.15 | முன்பள்ளி |
| 05.00 | தரம்-01 |
| 05.15 | தரம்-02 |
| 06.00 | தரம்-03 |
| 06.45 | தரம்-03 |
| 07.30 | தரம்-04 |
| 08.15 | தரம்-04 |
| 09.00 | தரம்-05 |
| 09.45 | தரம்-05 |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 |
| 12.30 | தரம்-03 |
| 01.15 | தரம்-04 |
| 02.00 | தரம்-04 |
| 02.45 | தரம்-05 |
| 03.30 | தரம்-05 |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English |
| 05.30 | English |

# மக்களுக்கு சேவைகளை திறம்பட செய்யவேண்டும்

## கிழக்கு சுகாதார அமைச்சின் செயலர் வலியுறுத்து

திருமலை, ஏப். 05

**நாம் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளோம். எமது சேவைகளை திறன்பட வழங்கவேண்டும். அதற்கான ஊதியங்களை அரசாங்கம் எமக்கு வழங்குகின்றது. அதற்கெற்றாப்போல் எமது கடமைகளைச் செய்யவேண்டும் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.**

மத்திய சுகாதார அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 25 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இணைப்புக் கடிதத்தை வழங்கும் நிகழ்வு நேற்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச பதவி வகிப்பவர்கள் சுறுசுறுப்பாகவும் சேவை மனப்பாங்குடனும், நேர்த்தியாகவும், மக்களிடம் இன்முகத்துடனும் தங்களது வேலைகளை செய்கின்றபோதுதான் அந்தத் தொழிலுக்கு மகிமையும், உயர்வும் கிடைக்கின்றது. அது மாத்திரமல்லாமல் ஒரு நிறுவனத்தில் சேவை புரிகின்ற அரச



ஊழியர்கள் சிறந்த சேவை மனப்பாங்குடனும், சிறப்பாகவும் தமது சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்ற போதுதான் அந்த நிறுவனத்துக்கு வெற்றியும் உள்ளது.

மக்கள் சேவையை பெறுவதற்காக வரும்போது சேவை வழங்குநர்களின் நடத்தையை அவதானித்து தங்கள் மனதிலே சேவை வழங்குநர் குறித்து பதித்துக் கொள்கின்றனர். அவ்வாறான மனப்பதிவுகள் சிறப்பாக இருக்கும் போதுதான் சேவையாளன் வழங்குகின்ற சேவையில் திருப்தி கொள்கின்றார்கள். அந்த நல்லொதொரு மனப்பதிப்புக்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)



# அரசுக்கு எதிர்ப்பு வெளியிட்டு திருமலையிலும் போராட்டம்!

திருமலை, ஏப். 05

திருகோணமலை - அபயபுர சுற்று வட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் என்பவற்றைச் சுட்டிக்காட்டியே இந்தப் போராட்டம் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதில் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் பாதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி 'கோட்டா வெளியேறு', 'மக்களை வாழ விடு', 'ராஜபக்ஷ பரம்பரை வெளியேறு' போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதுடன் பொதுமக்களும் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)



# கிழக்குப் பல்கலை மாணவர் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஏப். 05

அரசின் பொருளாதார கொள்கைக்கு எதிராகவும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு கோரியும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

கிழக்கு பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தின் தகவல் தொழில்நுட்ப மற்றும் விவசாய பீடம் அமைந்துள்ள தொகுதியின் நுழைவாயிலில் ஆரம்பமான பேரணி, கொம்மாதுறை - திருவள்ளுவர் வீதியூடாக சென்று, மட்டக்களப்பு - திருமலை வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை பிரதான வளாகம் வரை சென்றது.

பிரதான வீதியில் ஒன்று கூடிய மாணவர்கள், தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உணவு இல்லை, எண்ணெய் இல்லை, மின்சாரம் இல்லை, கேஸ் இல்லை, பொருள்களின் விலை, வரிச்சுமைகளை குறையுங்கள் மற்றும் மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# உதைபந்தாட்ட மைதான மதில் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டல்

மட்டக்களப்பு, ஏப். 05

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நாவற்குடா கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட கிரீன் லயிட் உதைபந்தாட்ட மைதானத்துக்கு சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளது.

விளையாட்டுக்கழக உறுப்பினர்களினால் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தனிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மைதான சுற்றுமதில் வேலிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது .

நாவற்குடா கிழக்கு கிரீன் லயிட் உதைபந்தாட்ட கழக உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடந்த அடிக்கல் நிகழ்வில் மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சியாவுல் ஹக், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதர்சன்,தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன், நாவற்குடா கிழக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தலைவர் எ.பத்மநாதன்,கிராம சேவை உத்தியோகத்தர், மாநகர சபை உறுப்பினர்கள்,கிரீன் லயிட் உதைபந்தாட்ட கழக உறுப்பினர்கள்,கிராம மக்கள் என பலர் கலந்துண்டு சுற்று மதில் வேலிக்கான அடிக் கல்லை நாட்டினர். (அ)

# திருக்கோவில் யுவதிகளுக்கு சுயதொழில் பயிற்சிநெறிகள்

அம்பாறை, ஏப். 05

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சுயதொழில் ஆர்வம் கொண்ட யுவதிகளுக்கு இருவார கால சுயதொழில் பயிற்சிநெறிகள் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் அதிகாரி கே.பிரபாகரனின் ஒழுங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நேற்று நடந்தது.

இலண்டன் பாலேந்திராவில் நிதியுதவியுடன் சிவனருள் பவுன்டேஷனின் ஏற்பாட்டில் இளைஞர் சேவைகள் மன்றத்




தின் ஒழுங்கமைப்பில் 15 யுவதிகளுக்கான இரண்டு வாரகாலச் சுயதொழில் பயிற்சிநெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், சமுக செயற்பாட்டாளர் வே.வாமதேவன், இளைஞர்சேவைகள் அதிகாரி கே.பிரபாகரன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தயாபாரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# ஏறாவூர் விளையாட்டு மைதான புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஏப். 05

ஏறாவூர் முஹாஜிரின் கிராம விளையாட்டு மைதான புனர மைப்பு வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

2 மில்லியன் ரூபாய் செல வில் விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள் ளது.

ஏறாவூர் முஹாஜிரின் கிராம விளையாட்டு மைதான புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான நஸீர் அஹமட்டின் இணைப்புச்



செயலாளர் ஏ. அப்துல் நாஸர் , பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எம். ஹன்சுல் சிஹானா, கிராம அலுவலர் எம்.ஏ.ஜே. அஸ் ான், ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ. தஸ்லிம் உட்பட விளையாட்டு கழக உறுப்பினர்களும் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# பாரிய கோவிட் பரிசோதனை

## 10,000 படையினர், சுகாதார பணியாளர்களை நேற்று ஷங்காய் நகருக்கு அனுப்பியது சீனா!



பீஜிங், ஏப். 05

**கொவிட் தொற்று நோய் நெருக்கடியுடன் போராடி வரும் ஷங்காய் நகரில் உள்ள 26 மில்லியன் மக்களையும் நேற்று திங்கட்கிழமை கோவிட் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு சீனா அரசு முடிவு செய்தது.**

இதற்கு உதவும் வகையில் இராணுவம் மற்றும் ஆயிரக்கணக்கான சுகாதாரப் பணியாளர்கள் ஷங்காய்க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இது சீனாவின் மிகப்பெரிய பொதுச் சுகாதார முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

நேற்று அதிகாலை முதலே கிராமம் கிராமாகச் சென்று சோதனைகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக கோவிட் பரிசோதனை மையங்களில் அதிகாலை முதலே மக்கள் நீண்ட வரிகைகளில் காத்திருந்தனர்.

மிகப்பெரிய கோவிட் பரிசோதனைக்கு உதவ ஏதுவாக சீன மக்கள் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த தரைப்படை, கடற்படை மற்றும் கூட்டு தளவாட ஆதரவுப் படைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 2,000 க்கும் மேற்பட்ட மருத்துவ பணியாளர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஷங்காய்க்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஜியாங்சு, ஜெஜியாங் மற்றும் பீஜிங் போன்ற பல மாகாணங்கள் தங்கள் சுகாதாரப் பணியாளர்களை ஷாங்காய்க்கு அனுப்பியுள்ளன. இவ்வாறு சுமார் 10,000 க்கும் அதிகமான சுகாதார பணியாளர்கள் ஷாங்காய் விரைந்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொரோனா வைரஸ் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட வூஹானில் ஆரம்பகால தொற்று நோய் நெருக்கடியை சமாளிக்க சீனா மேற்கொண்ட முயற்சிக்குப் பின்னர் மிகப்பெரிய சுகாதார பதிலளிப்பு நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

2020 ஆரம்பத்தில் ஹூபே மாகாணத்தில் உள்ள வுஹான் நகருக்கு சீன மக்கள் விடுதலை இராணுவம் சுமார் 4,000 இராணுவ மருத்துவப் பணியாளர்களை அனுப்பி வைத்தது.

கடந்த வாரம் திங்கட்கிழமை இரண்டு கட்ட சமூக முடக்கலை தொடங்கிய ஷங்காய் நகரம், தொடர்ந்து சமூக முடக்கல் நடவடிக்கையை நகரம் முழுவதும் விரிவுபடுத்தியது.

நேற்று முன்தினம் வரை ஷாங்காய் நகரில் 8,581 அறிகுறியற்ற தொற்று நோயாளிகளும் 425 அறிகுறியுடன் கூடிய தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சர்வதேச அளவிலான ஒப்பீட்டு அடிப்படையில் இந்த எண்ணிக்கை குறைந்ததாக இருந்தாலும் ஜனாதிபதி ஜி ஜின்பிங் உத்தரவின் பேரில் தடமறிதல், தனிமைப்படுத்தல், பரிசோதனை முயற்சிகளை சீனா தீவிரமாக முன்னெடுத்துள்ளது. (அ)

# கலிபோர்னியாவில் 2 குழுக்கள் மோதல்

## துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் பலி



கலிபோர்னியா, ஏப். 05

அமெரிக்காவின் - கலிபோர்னியா மாகாண தலைநகரான சாக்ரமெண்டோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 12 பேர் காயமடைந்ததாக சாக்ரமெண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

நகரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரு குழுக்களுக்கு இடையே வெடித்த மோதலைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் கொல்லப்பட்டனர் என சாக்ரமெண்டோ நகர பொலிஸ் பொறுப்பதிகாரி கதி லெஸ்டர் கூறினார்.

எனினும் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர்கள் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய எந்த விவரங்களையும் அவர் வெளியிடவில்லை.

துப்பாக்கிக் குண்டுகள் அருகிலுள்ள கட்டடங்களையும் தாக்கின. சம்பவ இடத்தில் இருந்து படுகொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது. இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலர் சம்பந்தப்பட்டிருப்பதாக புலனாய்வாளர்கள் சந்தேகிப்பதாக சாக்ரமெண்டோ நகர பொலிஸ் பொறுப்பதிகாரி லெஸ்டர் கூறினார்.

ரோந்து சென்ற பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 2 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அங்கு பெருமளவானவர்கள் கூடி பாதிக்கப்பட்டவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

உள்ளூர் கே.சி.ஆர்.ஏ. செய்தி சேவை வெளியிட்ட ஒரு வீடியோவில் சில இளைஞர்கள் முதலில் தெருவோரத்தில் நின்று மோதிக்கொள்வது பதிவாகியுள்ளது. அதன் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு, அங்கிருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு ஓடியதைக் காண முடிகிறது.

இந்த வீடியோவில் சுமார் 76 தடவைகள் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்த தகவல்கள் தெரிந்தவர்கள் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு சாக்ரமெண்டோ நகர பொலிஸ் பொறுப்பதிகாரி லெஸ்டர் கோரியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்கா முழுவதும் துப்பாக்கி வன்முறை அதிகரித்து வருகிறது. கோவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (அ)

# 87 முறை கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட நபர் கைது!

பேர்லின், ஏப். 05

ஜேர்மனியில் 87 முறை கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜேர்மனியில் 61 வயதான நபர் ஒருவர் 4 மாகாணங்களில் உள்ள 3 வெவ்வேறு கொரோனா தடுப்பூசி நிலையங்களில் அடுத்தடுத்து தடுப்பூசி போட்டுக் கொண்டார். இதனால் சந்தேகம் அடைந்த சுகாதார பணியாளர்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.



உடனடியாக அவரை கைது செய்த பொலிஸார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் நாள் ஒன்றுக்கு 3 முறையும் இதுவரை 87 முறை அவர் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டதாக அதிர்ச்சிகர மான தகவலை தெரிவித்துள் ளார்.

ஜேர்மனியில் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பலரும் அதற்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளாத நபர்களுக்காக இவர் தடுப்பூசி போட்டுக்கொண்டு முறைகேட்டில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# பிரேசிலில் வெள்ளம் 14 பேர் உயிரிழப்பு!



ரியோ டி ஜெனிரோ, ஏப். 05

பிரேசிலில் தொடரும் மழை மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி குழந்தைகள் உட்பட 14 பேர் பலியாகி உள்ளனர். பலரும் மாயமாகி உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் எதிரொலியாக பல இடங்களில் நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 14 பேர் பலியாகி உள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது, ரியோ டி ஜெனிரோ மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் சில நாடகளாக பலத்த மழை பெய்து வருகிறது.

பரெட் நகரில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, தந்தை மற்றும் அவரது, 2 - 17 வயது வரையிலான ஏழு குழந்தைகள் பலியாயினர். கடலோர நகரமான போன்டா நெக்ராவில் நிலச்சரிவால் ஏழு வீடுகள் பலத்த சேதம் அடைந்தன. இதில் நால்வர் காயம் அடைந்தனர். மெஸ்கிடா நகரில் மூன்று நாட்களாக தொடரும் மழையில், 38 வயதுடைய ஒருவர் மின்சாரம் தாக்கி பலியானார்.

ஒட்டு மொத்தமாக மழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 14 பேர் பலியாகி உள்ளனர். மாயமானோர் குறித்த விவரங்கள் முழுமையாக வந்து சேரவில்லை. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் தீயணைப்பு படையினர் மீட்பு பணிகளை முடுக்கி விட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# தென்னாபிரிக்கா அபார வெற்றி!



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி 220 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா முன்னிலைப் பெற்றுள்ளது.

டர்பன் மைதானத்தில் கடந்த மாதம் 31ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, முதல் இன்னிங்ஸிற்காக 367 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதன்போது அணியின் அதிகப் பட்ச ஓட்டங்களாக, டெம்பா பவுமா 93 ஓட்டங்களையும் டீன் எல்கர் 67 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், காலீல் அஹமட் 4 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன் 3 விக்கெட்டுகளையும் எபொட் ஹொசைன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 298 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமதுல் ஹசன் ரோய் 137 ஓட்டங்களையும் லிடொன் தாஸ் 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஹர்மர் 4 விக்கெட்டுகளையும் வில்லியம்ஸ் 3 விக்கெட்டுகளையும் ஒலீவியர் மற்றும் முல்டர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதன்பிறகு 69 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதற்கமைய பங்களாதேஷ் அணிக்கு 274 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகப் பட்ச ஓட்டங்களாக டீன் எல்கர் 64 ஓட்டங்களையும் ரெயான் ரெக்கொல்டன் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மெயிடி ஹசன் மற்றும் எபொட் ஹொசைன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் டஸ்கின் அஹமட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 274 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 53 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி 220 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, நஜ்முல் ஹொசைன் சந்தோ 26 ஓட்டங்களையும் டஸ்கின் அஹமட் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், கேசவ் மஹாராஜ் 7 விக்கெட்டுகளையும் சிமோன் ஹார்மன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (அ)

# மியாமி பகிரங்க ரென்னிஸ்: அல்கராஸ்-இகா சம்பியன்!





மியாமி பகிரங்க ரென்னிஸ் தொடர், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்பியா மற்றும் போலந்தின் இகா ஸ்விடெக்கின் கைகளை சம்பியன் கிண்ணம் அலங்கரித்தவாறு நிறைவுக்கு வந்துள்ளது.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்பியா, நோர்வேயின் காஸ்பர் ரூட்டுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் கார்பியா, 7-5, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

அதேபோல பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், போலந்தின் இகா ஸ்விடெக், ஜப்பானின் நவோமி ஒசாகாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், போலந்தின் இகா ஸ்விடெக், 6-4, 6-0 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். (அ)

# மூன்றாவது தோல்வியை பதிவு செய்தது சென்னை!



ஐ.பி.எல். ரி-20 தொடரின் 11ஆவது லீக் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணி 54 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அதேவேளை, நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு, இத்தொடரின் மூன்றாவது தோல்வி இது வாகும்.

மும்பையில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 180 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, லிவிங்ஸ்டன் 60 ஓட்டங்களையும் தாவன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்னை அணியின் பந்துவீச்சில், கிறிஸ் ஜோர்தான் மற்றும் பிரிடோரியஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் முக்கேஷ் சௌத்ரி, பிராவோ மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 181 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 18 ஓவர்கள் நிறைவில் 126 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், பஞ்சாப் கிங்ஸ் அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப் பட்ச ஓட்டங்களாக, சிவம் டுபே 57 ஓட்டங்களையும் டோனி 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பஞ்சாப் அணியின் பந்துவீச்சில், ராகுல் சஹார் 3 விக்கெட்டுகளையும் வைபவ் ஆரோரா மற்றும் லிவிங்ஸ்டன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ரபாடா, ஹர்ஸ்தீப் சிங் மற்றும் ஒடியன் ஸ்மித் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 60 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் சாய்த்த லிவிங்ஸ்டன் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# அர்ஜென்ரீனா கிராண்ட் பிரிக்ஸ்: அலிக்ஸ் எஸ்பர்காரோ சம்பியன்!



அர்ஜென்ரீனா கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இளசுகளின் விருப்ப விளையாட்டாக இரசிக்கப்படும் மோட்டோ ஜிபி பந்தயம் நடப்பு ஆண்டு 21 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்றது.

அந்த வகையில் ஆண்டின் மூன்றாவது சுற்றான அர்ஜென்ரீனா கிராண்ட் பிரிக்ஸ், டெர்மாஸ் டி ரியோ ஹோண்டோ சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 120.2 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 20 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறிபாய்ந்தனர்.

இதில், அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ, பந்தய தூரத்தை 41 நிமிடங்கள், 36.198 வினாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்தார். அத்தோடு முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இதையடுத்து, டுகார்டி அணியின் ஜோர்ஜ் மார்டின், 0.807 செக்கன்கள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து இரண்டாவது இடத்தை பிடித்ததோடு, அதற்கான 20 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார்.

இவரையடுத்து, சூசுக்கி அணியின் அலெக்ஸ் ரின்ஸ், 1.330 செக்கன்கள் பின்னிலையில் பந்தய தூரத்தை கடந்து மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கான 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இதுவரை நடந்து முடிந்துள்ள மூன்று சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில், அப்ரில்லா அணியின் அலிக்ஸ் எஸ்பர்காரோ ஒரு வெற்றியுடன் 45 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

கே.டி.எம். அணியின் பிரட் பைண்டர் 38 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், டுகார்டி அணியின் எனே பாஸ்டியாநினி ஒரு வெற்றியுடன் 36 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

நான்காவது சுற்றான அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 11ஆம் திகதி அமெரிக்காஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது. (அ)



# கோட்டா வீட்டுக்கு செல்லுங்கள்!

### வவுனியாவில் இளைஞர்கள் போராட்டம்

வவுனியா, ஏப். 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு தெரிவித்து இளைஞர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கோசங்களை எழுப்பியவாறும் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் பதாதைகளை ஏந்தியவாறும் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டக்காரர்கள் ஏ-9 வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறிது நேரம் ஏ-9 வீதியை மறித்துப் போராடிய அவர்கள், பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தாது பிரதான வீதியிலிருந்து விலகிச் சென்று வீதியோரத்தில் நின்று "கோட்டா வீட்டுக்குச் செல்லுங்கள்" எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுவை உடனடியாக கூட்டுங்கள்

### சம்பந்தனிடம் ரெலோ வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 05

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நீண்டகாலமாக இடம் பெறாமையால் உடனடியாக இன்று செவ்வாய்க்கிழமை கூட்டுமாறு ரெலோ வலியுறுத்தியுள்ளது.**

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதைய நாட்டு சூழலைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டவேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஒன்பது வயது சிறுவன் தீ விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 05

ஹெம்மாதகம கினிஹப்பிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஹெம்மாத்தகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் தரம் 4 இல் கல்வி பயின்றுவந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி இராஜினாமா

கொழும்பு, ஏப். 05

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, தனது இராஜினாமா கடிதத்தை நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும்



கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக அவர் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொது போக்குவரத்துகள் நேற்று முதல் வழமைக்கு

கொழும்பு, ஏப். 05

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதால், ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியதாக ரயில் திணைக்களம் தெரிவித்தது.

அதேநேரம், 15 சதவீத தனியார் பஸ்கள் நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

அருகில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபையில் தனியார் பஸ்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என போக்குவரத்து அமைச்சரும், இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரும் தமக்கு அறியப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அதேநேரம், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களும் வழமைக்கு திரும்பியுள்ளதாக அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க கூறினார். (அ)

# காஞ்சன விஜேசேகரவின் வீடும் நேற்று முற்றுகை

கொழும்பு, ஏப். 05

இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் மாத்தறை வீட்டுக்கு முன்பாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்திற்கும் அமைச்சர்களுக்கும் எதிராக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எல்லை மீறும் சமூக ஊடகங்களை முற்றாகவே தடை செய்ய முடியும்

### தொழில்நுட்ப அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 05

பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங் களைப்பயன்படுத்துவோர் தமது நெறிமுறைகளை மீறும் வகையில் செயற்படும் போது சமூக ஊடகங்களின் பாவனையை நாட்டில் முற்றாகத் தடை செய்ய முடியும் என தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூகத்தில் தனிப்பட்ட உறவுகளை வளர்ப்பது போன்ற இலக்குகளின் அடிப்படையில் சமூக ஊடகங்கள் உருவாக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், சமூக ஊடகங்களை வன்முறைச் செயல்களை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஏனெனில் அது ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் அதன் கோட்பாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் என்று பேஸ்புக் போன்ற சமூக ஊடக அமைப்புகளால் இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தமது நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தால், நாட்டில் சமூக ஊடகப் பாவனையை முற்றாக நிறுத்த முடியும் எனவும் சம்பந்தப்பட்ட சமூக ஊடக அமைப்புகள் மூலம் தொழில்நுட்ப அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# 'காவியநாயகன்' திருப்பாடுகளின் நாடகம் நாளை மறுதினம் முதல் 10 ஆம் திகதிவரை

யாழ்ப்பாணம், ஏப். 05

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் பிரமாண்டமான அரங்க ஆற்றுகையான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் நாளை மறுதினம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.



வியாழன்,சனி,ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் இவ்வாற்றுகை ஆரம்பமாகவுள்ளது.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் இவ்வாற்றுகை கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மேடையேற்றப்படவில்லை என்பதுடன் கடந்த ஆண்டு 'களங்கம்' என்னும் பெயரில் சிறிய அளவில் மேடையேற்றப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு வழமை போல் பிரமாண்டமான அரங்க அமைப்பு,காட்சியமைப்பு,ஒலி,ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலும் நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து மாபெரும் படைப்பாக தயாரித்தளிக்கும் இவ்வாற்றுகையை ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ. மரியசேவியர் அடிகளாரால் 2001ஆம் ஆண்டில் முதன் முதலாக எழுதப்பட்ட 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம், "மனிதம்" என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் அமைந்துள்ள இயேசுவின் வாழ்வில் அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும்,கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் என்பதைக் கூற முனைகின்றது.'காவிய நாயகன்' இதற்கு முன்னதாக 2001,2004,2008, 2013 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது போது நெறியாள்கையை நீ. மரியசேவியர் அடிகள், யோ. யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் மேற்கொண்டார்கள். இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றத்தின் நாடகப் பொறுப்பாளரும் பெண் அரங்கக் கலைஞருமான வைதேகி செல்வம் எமில் மேற்கொண்டுள்ளார்.இவர் 2014 ஆம் ஆண்டில் 'வேள்வித் திருமகன்' ஆற்றுகையை நெறியாள்கை செய்து மிகுந்த வரவேற்பைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)


# வியுக்தியார் பதில்கள்



வாராவாரம் உங்கள் கேள்விகளுக்கு வியுக்தியார் பதிலளிக்கவிருக்கிறார்.
அது அரசியல், சமூகம், சமயம் என்று எந்த துறையில் உங்களுக்கு சந்தேகமிருந்தாலும் கேள்விகளை அனுப்புங்கள்.
வியுக்தியார் தனக்கே உரிய பாணியில் பதில் தருவார்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

வியுக்தியார் பதில்கள்,
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## கோட்டாபயவின்...

கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

"கோட்டாபய அரசின்கீழ் இடைக்கால அரசு மட்டுமல்ல, எந்த அரசு வந்தாலும் அதில் அங்கம் வகிக்க தமது கட்சி தயார் இல்லை." என்று ஜேவிபியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (அ)

## மத்திய...

அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டில் எழுந்துள்ள பெரும் பொருளாதார நெருக்கடியை அடுத்து நேற்று முன்தினம் அமைச்சர்கள் அனைவரும் தமது அமைச்சுப் பதவிகளை துறந்தனர். இதனை அடுத்து நேற்று மத்திய வங்கியின் ஆளுநரும் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (அ)

## ரெலோவை...

தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேறினால் மகிழ்ச்சியடைவேன் என அண்மையில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் நேற்று நடந்த நிழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த த.சித்தார்த்தன்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஒரு கட்சியை வெளியேறுமாறு மற்றொரு கட்சியை சேர்ந்தவர் கூறுவது தவறானது. அப்படி ஒருவர் கூறி மற்றொரு கட்சி வெளியேறாது. வெளியேறவேண்டிய அவசியமும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் பலப்படுத்தவே நாம் முயற்சிக்கிறோம். கூட்டமைப்பை மேலும் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது.

கூட்டமைப்பில் உள்ள ஒரு கட்சியை சேர்ந்தவர், இன்னொரு கட்சியை வெளியேறுமாறு இஷ்டம் போல கூறுவதற்கெல்லாம் இடமளிக்கக் கூடாது. விரைவில் கூட்டமைப்பின் தலைவர்கள் கூடி, இதற்கான நிரந்தர ஏற்பாடொன்றை செய்வோம்-என்றார். (அ)

## 113எம்.பிக்கள்...

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டமொன்றின் பின்னர் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இதன்படி பெரும்பான்மையை நிரூபிக்க எதிரணிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, இச்சந்திப்பில் பங்கேற்ற சுதந்திரக்கட்சி உறுப்பினரான சாமர சம்பத்,

"ரணில், அநுர என அவர் பிரதமர் ஆனாலும் ஒத்துழைப்பு வழங்கப்படும்." - என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, பாராளுமன்றத்தில் இன்று சாதாரண பெரும்பான்மையையும் (113) இழக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில.

பாராளுமன்ற கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஆளுங்கட்சியை சேர்ந்த 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று எதிரணி பக்கம் அமர்வார்கள் என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தகவல் வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ்...

இயக்கச்சி நபர் உயிரிழந்த பின்னர் அவருடைய ஆவணங்களை விசாரணைக்கு உட்படுத்தியபோது வட்டக்கச்சியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கமலாகரின் தொலைபேசி இலக்கமும், கைதடி வைத்தியசாலை ஊழியர் வைத்தியலிங்கம் நிர்மலதாஸின் திருமண அழைப்பிதழும் அவருடைய தொலைபேசியில் காணப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையிலேயே அவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அதேவேளை, அண்மையில் அவர்கள் சிறைச்சாலைக்குள்ளும் அவர்களின் உறவினர்கள் ஆளுநர் அலுவலகத்தின் முன்பாகவும் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனிடையே,

குறித்த இருவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றிருந்தது.

நேற்று அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர்கள் இருவரையும் பிணையில் செல்ல நீதவான் லெனின் குமார் உத்தரவிட்டார். (அ)

## இன்றுமுதல்...

மாலை 5 மணிவரை 4 மணித்தியாலங்களும், மாலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை 2 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுலாகவுள்ளது.

பி,கியூ,ஆர்,எஸ்,ரி,யு,வி,டபிள்யூ ஆகிய வலயங்களுக்கு முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை 4 மணித்தியாலங்களும், மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரை 2 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுலாகவுள்ளது. (அ)

## அமைச்சர்...

பட்டு வருகின்றன.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வீட்டுக்கு முன்பாக அதிகளவான மக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகைத் தாக்குதல் மேற்கொண்டனர். (அ)

## அரசிலிருந்து...

பங்குபற்றலுடன் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் தலைமை யில் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது 132 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதனையடுத்தே, சுதந்திரக்கட்சி தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மஹிந்தவின்...

ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்காலை நகரில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கார்ல்டன் இல்லத்தை நோக்கிப் பேரணியாக செல்ல முயற்சித்தனர்.

இதன்போது, வீதித் தடைகளைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை இடைநடுவே நிறுத்துவதற்கு பொலிஸர் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் கார்ல்டன் இல்லத்திற்கு செல்ல தொடர்ந்து முயற்சித்தனர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகை தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தங்காலை நகரில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக மேலும் பொலிஸார் வரவழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# நான்கு புதிய அமைச்சர்கள் ஜனாதிபதியால் நியமனம்



கொழும்பு, ஏப். 05

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அனைத்து அமைச்சர்களும் நேற்று முன்தினம் நள்ளிரவு அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துள்ள நிலையில் புதிதாக அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நீதி அமைச்சராக செயற்பட்ட அலி சப்ரி நிதி அமைச்சராகவும், தினேஷ் குணவர்தன கல்வி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நெடுஞ்சாலைகள் அமைச்சராக ஜோன்ஸ்ட்ன பெர்னாண்டோவும் , வெளிவிவகார அமைச்சராக ஜீ. எல். பீரிஸும் நியமிக்கப்பட்டனர். (அ)

# 69 இலட்சம் மக்களின் ஆதரவு இன்றும் ஜனாதிபதிக்கு உண்டு

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்கள், அவருக்கு ஆணையை வழங்கியுள்ளனர். எனவே ஜனாதிபதி பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு இன்னும் மக்களின் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிக்க தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவித்தார்.

தற்போது முன்னெடுக்கப்படும் பொதுப் போராட்டங்கள் சிறு போராட்டங்களே எனத் தெரிவித்த அமைச்சர், மக்களுக்கு நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ஜனாதிபதியை...

பல்கலை முன்பாக ஆரம்பமான பேரணி பல மாணவர் களின் பங்கேற்போடு யாழ். நகர் நோக்கிச் சென்றது.

பலாலி வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து, அங்கிருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தை சென்றடைந்தது. பஸ் நிலையம் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் மாணவர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கிருந்து, கஸ்தூரியார் வீதியூடாக , ஸ்ரான்லி வீதியை அடைந்து அங்கிருந்து ஆரியகுளம் சந்தியை அடைந்து மீண்டும் பலாலி வீதியூடாக பல்கலைக்கழகத்தை சென்றடைந்தது.

மாணவர்கள் பேரணியாக ஸ்ரான்லி வீதியூடாக செல்லும்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் முன்பு சில நிமிடங்கள் தரித்து நின்று அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-03)

## நாமலின்...

பொதுமக்கள் பேரணியாக சென்றுகொண்டிருந்த நிலையில் வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த நாமல் ராஜபக்ஷவின் பிரமாண்ட பதாகையை கழற்றி வீதியின் நடுவே கொண்டுவந்தனர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிங்கள பெண்மணி ஒருவர் பதாகையில் இருந்த நாமல் ராஜபக்ஷவின் முகத்தின் மீது அடித்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய போராட்டக்காரர்கள் நாமலின் பதாகையை கிழித்து தமது எதிர்பபை வெளிப்படுத்தினர். (அ)

## கோட்டாபய...

காரணமாக ஜனாதிபதி பதவி விலகுமாறு கோரி பொதுமக்கள் பல பிரதேசங்களில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் அவரது அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் நேற்றும் பொதுமக்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்துள்ள நிலையில், நான்கு பேர் கொண்ட தற்காலிக அரசாங்கத்தை நியமிக்க ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின்போது பல முன்னணி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வீடுகளும் பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டன.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதியுடன் இணைந்து அவர்களையும் பதவி விலகுமாறு கோரி பொதுமக்கள் அமைச்சர்களின் வீடுகளை முற்றுகையிட்டு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.


பிரதமர் மஹிந்தவின் தங்காலையில் உள்ள தனிப்பட்ட இல்லம், அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல, காமினி லொக்குகே, ரமேஷ் பத்திரன, காஞ்சன விஜேசேகர, ரொஷான் ரணசிங்க, நிமல் லான்சா மற்றும் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோரின் வீடுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டன. (அ)

ஈழநாடு
Eelanadu




## மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 01 - 1929



மறைவு
31 - 03 - 2022

### மரியாம்பிள்ளை பீற்றர் போல் (இராஜரட்ணம்)

**Warrant Officer in Sri Lankan Air Force**

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பீற்றர் போல் கடந்த 31-03-2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை – மரியபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜோசப் ராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், பூமணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஜெயவதி(றாஜினி), பிலிப்ஸ்(றெஜி), அன்டன் ராபர்ட் (றெக்சி), காலஞ்சென்ற றெமி, விலார்னி(றொபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்றவர்களான ராசாத்தி, ராணி, நவரட்ணம், விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கியூகோ, மலர், தர்சினி, றொசான் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

அனோஜ் – சமந்தா, பிரண்டா – ரோனி, கபி – நிரோசன், நிரோஸ் – மீரா, கிறவின் – டினிசியா, ஜெசீலன், கிறிபின், செபான் ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்ற லூக்கா, ஆரியன், ஏவ்லின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

*பார்வைக்கு*
Tuesday, 05 Apr 2022 5:00 PM - 9:00 PM
Wednesday, 06 Apr 2022 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*திருப்பலி*
Wednesday, 06 Apr 2022 10:00 AM
St. Thomas the Apostle Roman Catholic Church 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada.

*நல்லடக்கம்*
Wednesday, 06 Apr 2022 11:30 AM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பூமணி - மனைவி**
**Mobile : +14162914874**
**றாஜினி - மகள்**
**Mobile : +14164534264**
**றெஜி - மகன்**
**Mobile : +14166247680**
**றெக்சி - மகன்**
**Mobile : +16474089310**
**றொபி - மகள்**
**Mobile : +12486025129**

தகவல்:
**குடும்பத்தினர்**





# புறக்கோட்டைப் பகுதியை முற்றுகையிட்டனர் மக்கள்

*கொழும்பு, ஏப். 05*

கொழும்பு - புறக் கோட்டை பிரதான வீதி பகுதியில் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அரசுக்கு எதிராகக் கோஷமிட்டவாறு தேசி யக்கொடிகளையும் ஏந்தியவண்ணம் மக்கள் போராட்டத்தை மேற் கொண்டனர்.

கொழும்பில் தாமரை தடாகம் முன்பாக, சுதந் திர சதுக்கம், மோதறை, பஞ்சிகாவத்தை போன்ற முக்கிய பல பகுதிகளிலும் நேற்று மக்கள் போராட் டத்தில் ஈடுபட்டுள்ள மையை காண முடிந்தது.

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்கள் வலுப் பெற்ற பின்னணியில் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கை களுக்காக வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர். (அ)



## யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் நேற்று போராட்டம்

*யாழ்ப்பாணம், ஏப். 05*

யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் அரசாங்கத்துக்கு எதிராக யாழ். நகரில் நேற்று போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதார வீழ்ச்சியால் மக்கள் வாழ்க்கையை நசுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டக்காரர்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகத்திலிருந்து ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு சென்றனர்.

இந்த போராட்டம் காரணமாக யாழ். நகரில் சில மணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சீலரத்ன தேரருக்கு எதிர்ப்பு



*கொழும்பு, ஏப். 05*

கொழும்பு பத்தர முல்லையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில், சீலரத்ன தேரர் கலந்துகொள்ள முயற்சித்த போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கூறினர்.

இதனை அடுத்து சீலரத்ன தேரர் ஆர்ப்பாட்ட இடத்திலிருந்து வெளியேறு சென்றார். (அ)




## மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 02 - 1941



மறைவு
02 - 04 - 2022

### திருமதி கமலாம்பிகை சத்தியசீலன்

யாழ். சண்டிலிப்பாய் ஆலங்குழாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை, பிரித்தானியா லண்டன் Kingsbury ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை சத்தியசீலன் கடந்த 02-04-2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற தில்லையம்பலம்(ஆலடி வாத்தியார்) – அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கணேஸ்பரன், ஜெகதாம்பாள், தேவசிகாமணி, நகுலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற செல்வத்துரை சத்தியசீலனின் பாரியாரும்,சத்தியகுமார்(ஜேர்மனி), ஜெகத்குமார் (நோர்வே), வாசுகி(கனடா), ஈஸ்வரகுமார்(லண்டன்), கௌரிகுமார்(நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும்,ஜீவகன், றெஜினி, விசாமா, கோமதி, தேவகி ஆகியோரின் அன்பு மாமியாரும்,தீபனா, நிமலன், துளசி, சாயினி, வினோதன், ஜனகன், கேசவி, சங்கர், கௌசிகா, சியாம், தருணி, மதுசன் ஆகியோரின் பேர்த்தியும்,மீராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**ஈசன் - மகன்**
**Mobile : +447863900903**
**கோமதி - மருமகள்**
**Mobile : +447527698644**
**சத்தியகுமார் - மகன்**
**Mobile : +4917634698349**
**கௌரிகுமார் - மகன்**
**Mobile : +4797036822**
**ஜெகத்குமார் - மகன்**
**Mobile : +4792048592**
**வாசுகி ஜீவகன் - மகள்**
**Mobile : +16479260634**
**நிமலன் - பேரன்**
**Mobile : +4915780615807**

தகவல்:
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.